
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ —தி. வ. ஆண்டு-௨௦௧௫— மாசி பரல்-௭

மார்ச்சு 1984

“செந்தமிழ்ச் செல்வி”

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு- டுஅ தி. வ. ஆண்டு உ0கடு, மாசி பரல்-எ

மார்ச் 1984

நாவலர் ந. மு. வே. நாட்டார் நூற்றாண்டு விழா

தமிழகத்தில் தனிப்பெரும் புலவர் பலரைத் தந்த பெருமை தஞ்சை மாவட்டத்திற்கும் உரியது எனில் அது மிகையன்று. அவ்வகையில் முற்றிய தமிழ்ப் புலமை பெற்றுப் பேராசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், தலைசிறந்த ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்தவர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நடுக்காவேரி என்னும் ஊரில் முத்துசாமி என்னும் பெரியாரின் திருமகனாராக 12—4—1884இல் தோன்றிய நாட்டார் அவர்கள், தாமே தமிழ் பயின்று மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகளில் முதன்மையாக வெற்றி பெற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை, திருச்சி முதலிய ஊர்களில் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றத் துவங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராக உயர்ந்து ஏழு ஆண்டுகள் பணிபுரிந்து தமது 57ஆவது அகவையில் ஓய்வு பெற்றார். இவருக்குச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

நாட்டார் அவர்கள் தம் வாழ்க்கையில் நம் கழகத்தோடும், மேனாள் ஆட்சியர் வ. சு. அவர்களோடும் பெற்ற தொடர்புகள் குறிப்பிடத்தக்கவையாகும். கழகவழி அவர் எழுதிய பல உரை நூல்கள் இன்றளவும் புகழ் பரப்பி நிற்கின்றன. இவர் ஏறக்குறைய இருபது நூல்கள்வரை எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்

தக்கவை சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரைகளாகும். இவரது தமிழ்ப் புலமைக்குப் பாண்டித்துரைத் தேவரவர்களால் தங்கத் தோடா பரிசு வழங்கப்பெற்றமை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இத்தகு சிறப்புகளைப் பெற்ற இப் புலவர் பெருமகனாரின் நூற்றாண்டு விழாவினை 12—4—1984இல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பூண்டிப் பெருநிலக்கிழாரும் கல்விக் காவலருமாகிய திருமிகு. கி. துளசி ஐயா வாண்டையார் அவர்களின் தலைமையில் நூற்றாண்டு விழாக்குழு வொன்று அமைக்கப்பெற்றுள்ளது. இதுபற்றிய செய்தி நம் செல்வியில் (திசம்பர் 83) முன்னரே வெளிவந்திருப்பதை அன்பர்கள் அறிவர்.

இந் நூற்றாண்டு விழாவின் தொடர்பாக நாட்டார் அவர்களின் அனைத்து நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மறுபதிப்புச் செய்து வெளியிடுதல்—சிறந்த முறையில் நூற்றாண்டு விழா மலர் வெளியிடுதல்—நாட்டார் அவர்கள் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவுதல்—அவர்தம் உருவச் சிலையினை அமைத்தல்—உருவப் படங்கள் வெளியிடுதல், தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை, சென்னை முதலிய நகரங்களில் நூற்றாண்டு விழாக்களைச் சீருஞ் சிறப்புமாகக் கொண்டாடுதல் என்றின்ன பிற ஏற்பாடுகளை இக் குழுவினர் செய்து வருகின்றனர்.

அண்மைக் காலமாகத் தமிழக அரசினர் பல நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். அவற்றுள் ஓராண்டுக் காலம் பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெற்றமையும் அதன் தொடர்பான செய்திகளும், எழுத்தோவியங்களும் எத்துணை ஆரவாரத்துடன் வெளிவந்தன என்பதையும் தமிழன்பர்கள் அறிவர். பாரதியாரவர்களின் மாண்பினை நாம் அறிந்திருக்கிறோம். தமிழோடு அரசியல், தேசியம் இவை கலந்த புகழ் பாரதியாரது புகழ். எனவே, அவ் விழா முதன்மை பெற்றதில் வியப்பில்லை. ஆனால் அரசியல் கலவாத பெரும் புலவர்களின் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டுவதும் தமிழ்ப் பற்றுடைய அனைவரின் கடமையாகும். குறிப்பாக அண்மையில் நடை பெறவிருக்கும் நாட்டார் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா பிற எந்த விழாக்களுக்கும் குறைந்ததன்று.

நாட்டுப் பற்றுக்கு அடிப்படை மொழிப்பற்று, அவ் வகையில், இன்றுள்ள பல அரசியல் தலைவர்களின் தமிழ் அறிவுக்கும், பற்றுக்கும் வித்திட்டவர் நாட்டார் ஐயா என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. தமிழ் இலக்கியத்தின் அடிப்படைப் பயிற்சிக்குரிய சின்னஞ் சிறு நூல்களான நல்வழி, மூதுரை, நன்னெறி போன்ற நூல்களைப் பள்ளிச்சிறார் பயின்று பயன்பெறும் வகையில் பதவுரை கருத்துரை

எழுதியவர் நாட்டார் அவர்களே என்பதும், அவற்றை நீதி நூற் கொத்துகளாகத் தமிழகத்திற்குத் தந்தது கழகம் என்பதும் நாடறிந்த உண்மை.

அங்ஙனமே சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, திருவிளையாடல் முதலிய சீரிய இலக்கியங்கட்குச் சிறந்த உரை எழுதித் தமிழ் இலக்கிய உலகிற்குத் தொண்டாற்றியவர் நாட்டார் அவர்களே. நாட்டார் அவர்களின் உரைநூல்களைப் பயிலாத தமிழ்ப் புலவர்களே இரார் எனின் அது மிகையன்று.

இங்ஙனமெல்லாம் இலக்கிய உலகில் அமைதியான முறையில் அரிய பெரிய தொண்டுகளைச் செய்த இப் பெரியாரை நினைந்து போற்றுதற்கு ஏற்ற நேரம் இதுவே.

எனவே, நாவலர் ந. மு. வே. நாட்டார் அவர்களின் நூற்றுண்டு விழா பிற எந்த விழாக்களுக்கும் குறைந்ததில்லை என்னும்படி ஆங்காங்கேயுள்ள தமிழ்ப்புலவர்களும், புரவலர்களும், தமிழ்ப் பற்றுளர்களும், தமிழ் இதழாசிரியர்களும் இதனைத் தம்முடைய பேச்சாலும் எழுத்தாலும் சிறப்புறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சைத் தமிழ்ச் சங்கம் ஆகிய வற்றின் வளர்ச்சியில் நாட்டார் ஐயா அவர்களின் பணியின் பங்கு மிகப் பெரிது. ஆகவே, அச் சங்கங்களும், அவை போன்ற பிற தமிழ்க் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியனவும் இந் நூற்றுண்டு விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தலே அப் புலவர் பெருமகனுர்க்கு நாம் செய்யும் நன்றிக் கடப்பாடாகும்.

ந. மு. வே. புகழ் நாளும் சிறந்திடுக!

தொடுக்கும் தமிழ்ப்பணிகள் அத்தனைக்கும் துணைநின்று
தூய்மை உளத்தோடு துறைதோறும் பணியாற்றி
படித்தோர் உளங்களிலே பதிந்துவிட்ட பண்பாளர்
பன்னூல் பலதந்து பைந்தமிழை வளர்த்திட்ட
நடுக்கா விரிதந்த நாவலராம் ந. மு. வே.
நாட்டார் அவர்கட்கு நாமெடுக்கும் இந்தவிழா
அடுக்கி அவர்புகழை அவனிக் குணர்த்தற்கு
அமைந்து சிறப்புறுக! அவர்புகழும் பரவிடுக!

—த. சி. வே.

நாட்டாரைப் போற்றுவோம் நாம்

[தெ. முருகசாமி,

முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.]

கரந்தை யென்றதுமே கன்றேடு ஆமீட்ட
சிறந்த புறப்பொருளின் சிறப்பெல்லாம் நினைப்பதைப்போல்
சிறந்த கவியரசர் சீர்போற்றும் தமிழவேள்
உறைந்திட்ட காலத்து உயர்கரந்தைத் தமிழ்ச்சங்கம்
நாட்டாரைப் பெற்றதினல் நற்றமிழைப் பகையின்றி
மீட்டார் இவரென்று மேன்மைகொள் தமிழ்நாட்டார்,
நாட்டார் பெயர்சொல்ல ந.மு.வேங் கடசாமி
நாட்டாரை யின்றி நானிலத்தில் எவரிருந்தார்? (1)

காட்டாத உரையெல்லாம் காட்டித் தமிழ்த்தாய்க்குப்
பூட்டாத சிலம்பதனைப் பூட்டுவித்தார் எந்நாட்டார்?
சங்கத் தமிழோடு சமயத் தமிழுணர்வை
எங்கும் பரப்பி எழில்சேர்த்தார் எந்நாட்டார்?
பண்டித மணியோடு பார்போற்றும் இரட்டையராய்க்
கண்டார் விண்டுரைக்க வந்தவர்தாம் எந்நாட்டார்?
பிள்ளைத் தமிழ்முதலாப் பேரிலக் கியங்கட்கு
கொள்ளைகொளும் அமுதஉரை கொண்டுரைத்தார் எந்நாட்டார்? (2)

மிடுக்கான உடலின்றி மெலிவான தோற்றத்தில்
நடுக்கா விரிவந்த ந. மு. வே. நாட்டார்தாம்
நூற்றண்டு கொள்கின்றர் நுவலும் இவ்வாண்டில்
ஊற்றுக்கண் தமிழிற்காய் உரைத்திட்ட அவருரையை
மாற்றுக் குறையாமல் மக்களெலாம் கண்டுணர
ஏற்றமுடன் பதிப்பித்து என்றும் அவர்நினைவைப்
போற்றிப் புகழ்ந்து புதுப்பொலிவைத் தீந்தமிழிற்கு
ஆற்றி அமைவோம் அகிலத்தீர் வாரீரே! (3)

நடுக்கா விரிவந்த நல்லகுண சீலர்
நடுக்காத உள்ளத்தால் நற்சிலம்பின்—நல்லஉரை
தீட்டாத காலத்துத் தீட்டிப் புகழ்கொண்ட
நாட்டாரைப் போற்றுவோம் நாம். (4)

பழனியும் பழநியும்

[கழக இலக்கியச் செம்மல், புலவர் இரா. இளங்குமரன்]

ஒரு செய்தி : பழனித் திருக்கோயில் மூலவரை வலுப்படுத்த அறிஞர் குழு அமைக்கப்படும்.

பூசகர்கள், சிற்பர்கள் கூடி, ''அடியார்கள் விரும்பிய வண்ணம் பல்வேறு முழுக்காட்டுகள் நடத்துதலால், பழனித் திருக்கோயில் மூலவர் திருவுருவப் படிமம் தேய்மானம் மிக்குளது. இச் சிதை வினின்று காத்தற்குக் குழு அமைக்க வேண்டும்'' என்று கோரிக்கை எழுப்பினர். குழு அமைக்கப்பட்டது; மூலவர் படிமம் ஆயப் பட்டது; முழுக்காட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செய்யத்தக்க செயல் இது. படிவம் கெடாமல் சிதையாமல் போற்றிக் காத்தல், அரசுக்கும் அறங்காவலர்க்கும் பூசகர்க்கும் பிறர்க்கும் கடமையே! இறையடியார்கள் அக் கடைப்பிடியைப் பேணி நடத்தல் முறைமையே! இவ்வாறு, மொழிச் சிதைவை—அழி பாட்டை—கேட்டைத்—தடுக்க அறைகூவல் உண்டா? அறிஞர் அமைப்பு உண்டா? அரசு ஆணை உண்டா? நடைமுறைக் கட்டுப்பாடு உண்டா? இல்லை! இல்லை! இல்லவே இல்லையே! ஏன் இந்த ஓரப் பார்வையும், ஒட்டுப் பார்வையும் ஒதுக்குப் பார்வையும்?

'பழனி'யைப் பழனி என்பதா? 'பழநி' என்பதா? பழனியைப் 'பழநி' ஆக்கல் மொழிக்கேடு என்று அறிந்தால்—அறிவித்தால்— அதைத் திருத்தியமைக்க அரசு முன்வர வேண்டுமே! அறிஞர்கள் முன்வர வேண்டுமே! அறங்காவலர் முன்வர வேண்டுமே! அடியார் களும், வலியுறுத்தவும் கைக்கொள்ளவும் வேண்டுமே! 'மொழியா? எக்கேடும் கெடட்டும்' என்று விட்டுவிட்டால், இவர்கள் செயல் ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணமும் வைப்பது அன்றி வேறன்றே! செய்தக்க அல்ல செயக்கெடும் என்பதை உணர்பவர், செய்தக்க செய்யாமையானும் கெடும் என்பதையும் உணர வேண்டும் அல்லவோ!

'பழனி' முன்னாள் ஊரா? பின்னாள் ஊரா? மலையூர் என்றால் அதன் பழமையைச் சுட்ட வேண்டியது இல்லையே! சங்கப் புலவர்கள் பாடு புகழுக்கு இடனாகிய ஊர் பழனி! சங்க நாள் வேந்தர் ஆட்சி யில் தழைத்தது அது.

அகப்பாடல்கள் இரண்டில் அகப்பட்டுக் கிடக்கிறது பழனி; எப்படி?

"நெடுவேள் ஆவி, அறுகோட்டியானைப் பொதினி"

"நெடுவேள் ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"

இப் 'பொதினி'யே 'பழனி'யாயது.

பொதினி, யாருக்குரியதாகப் பழ நாளில் இருந்தது? ஆவியர்க்கு இருந்ததாகச் சொல்கின்றனவே சுட்டப்பட்ட பாடல்கள் இரண்டும் (அகம் 1, 61).

பண்டைத் தமிழகத்தில் குறுநில மன்னர்களாக விளங்கிப் பெரும் புகழ் கொண்ட குடிகளுள் ஒன்று ஆவியர் குடி. அக் குடி முதல்வன், 'நெடுவேள் ஆவி'; அவன் முதல்வனாக, அவன் வழி வந்தோர் ஆட்சி புரிந்தது 'பொதினி'; பொதினியை ஆவியர் குடியினர் ஆளுங்கால் புகழொடும் விளங்கியவன், பேகன் என்பான். உடுத்தாததும், போர்த்தாததும் ஆகிய மயிலுக்குப் போர்வை வழங்கிப் புகழ் கொண்டானே பேகன்; அவனைப்பற்றிப் புறப்பட்ட புறப்பாட்டுகள் ஏழு (புறம் 141-7). அவற்றில் அவன் 'ஆவியர்கோ' எனப்படுவான். அவன் பெயரோ 'வையாவிக் கோப் பெரும்பேகன்' எனப்படும். இன்றும் அவன் வையாவி, பழனிக்கு அருகே உண்டு. அதன் இக்காலப் பெயரோ 'வையாபுரி' என்பது! வையாவி, வையாபுரி ஆனது மட்டுமா? எத்தனை எத்தனை 'வையாபுரிகள்' நாட்டில்!

ஆவியர் ஆட்சி செய்த பொதினிக்கு 'ஆவிநன்குடி' என்பதொரு பெயர். திருவொடு சேர்ந்து திருவாவிநன்குடி என்றாயிற்று. திருவாவிநன்குடியைச் சொட்டச் சொட்டப் பாடுகின்றார் அருணகிரியார். அவர் பாடல்களில் 'பழநி' தலை காட்டுகிறது. பதிப்பார் பதிப்புப்பாங்கு ஆகலாம்; எப்படி? மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பாடல் தொகுப்பைத் தொகுத்து வெளியிட்டவர் 'பழநி சாமி'யார்; அவர் பதிப்பில் 'பழனி'யைப் பார்க்க இயலுமா? என்னதான் 'பழநி', அருணகிரியார் பாடல் பதிப்பிலும், மாம்பழனார் பாடற் பதிப்பிலும் இருப்பினும் 'பழனுபுரி'யை மாற்ற முடியவில்லை! அஃது, உண்மையை நிலைப்படுத்தி விடுகின்றது. வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் பாடினார் 'பழனித் திருவாயிரம்'. அதில் எங்கும் பழனி! எல்லாம் பழனி! 'பழநி' தலைகாட்டவில்லை! பாடினாரும் பதிப்பாளரும் ஒரு குடியர்! ஒரு நிலையர்! அதனால் பழனியே கமழ்கிறது.

'பழநீ' என்பது 'பழநி' ஆய கதை இருக்கட்டும். அப்படி ஒரு சொற்புணர்ச்சி தமிழில் உண்டா? அப்படி ஒரு சொல்லிணைப்பைக் காட்டி, ஊர்ப்பெயரை நாட்ட இயலுமா? கழனி, துழனி உண்டு; அழனம் பழனம் உண்டு; அழன், புழன் உண்டு; எழினி, இழுனி உண்டு; தொழுனையும் உண்டு. ஆனால் 'பழநிப்' புணர்ச்சி ஒன்றும் இல்லையாம்.

சங்க நாள் பொதினியைக் கற்பார் 'பழனி'யைப் பார்க்கும்போது அதன் பழமைச் சீர்மையையும் வரலாற்று மாண்பையும் உணர்வார்! அதனைப் பெயர் மாற்றத்தால் மறைக்க வேண்டுவது என்ன?

நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்றைச் சிலம்பில் படிப்பார், அழகர் மலையில் 'சிலம்பாறு' எனப் பெயரிருக்கக் கண்டால் வரலாறு உணர்ந்து மகிழ்வர் அன்றோ! அதனை 'நூபுர கங்கை' என மாற்றியமைத்த ஏமாற்று, ஆற்றுப் பெயருக்கு மட்டுமா ஏமாற்று? தமிழர் வரலாற்றுக்கே ஏமாற்று இல்லையா? வன்கொலையினும் கொலை வரலாற்றுக் கொலையன்றோ?

பழனித் திருப்படிவம் தேய்மானம் இன்றி இருக்க வேண்டும் என எவ்வளவு தேட்டம் உண்டோ அவ்வளவு தேட்டம், அதன் திருப் பெயர் மாறாதிருக்கவும் வேண்டும் அன்றோ? 'பொதினி' என மாற்றாவிட்டாலும், 'பழனி' என மாறிய அளவிலாவது பேண வேண்டுமே! திருப்படிவத்தை மாற்றாமல், தேய்மான அளவிலாவது வைத்துப் போற்ற வேண்டும் என்று விரும்புகிறோம் அல்லவோ!

விடுதலையும் கெடுதலையும்

[நாகை. வேலன்]

தீந்தமிழை ஓதுகின்றோம் திருக்குறளைப் போற்றுகின்றோம்
தீவினைகள் அகன்றிடவே திருக்கோயில் செல்கின்றோம்
நீதிநெறி நிலைத்திடவே நெடுமொழிகள் பகர்கின்றோம்
வாய்மையொடு வாழுதற்கு வழிகள்பல கூறுகின்றோம்
ஆயினும்நம் அகத்திருளை அகற்றிடவே நாளும்
அறத்தினது அடிப்படையை அறிந்தொழுகும் நெஞ்சம்
ஆயிரத்தில் ஒன்றுண்டோ? ஆனதினால் அன்றோ
ஏடுகளைத் திறந்தாலும் யார்யார்வாய்க் கேட்டாலும்
ஓடுகின்ற நம்குருதி உறையும்படி கொலை, களவு,
ஆடுகின்ற சூதாட்டம், அலைக்கழியும் அன்னைகுலம்
பாடுபுகழ் படக்கலையில் பாலுணர்வின் ஆட்சி!
அத்தனையும் செய்திகளாய் அதிர்ச்சியுறச் செய்யும்;
இத்தனையும் எண்ணித்தான் இருவேறு உலகத்து
இயற்கையென இயம்பினரோ வள்ளுவரும் அந்நாள்!
இதுதான்நம் விடுதலைக்கு ஏற்றபொருள் என்றால்
விடுதலைக்கும் கெடுதலைக்கும் வேற்றுமைதான் உண்டோ?

புத்தாண்டுச் சிந்தனை : ஒழுக்கம்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

மனிதன் மனத்தால் சிறப்பு வாய்ந்தவன்; அவனது மனத்தின் மாண்பே அவனை விலங்குகளினின்றும் வேறுபடுத்துகின்றது : உயர்த்துகின்றது. 'அறத்திற்கு அடிப்படை மனமாசு இன்மை' என்பது வள்ளுவம். இன்றைய சமுதாயத்தில் மனம் மாசுபடாமல் இருக்கிறதா ? இந்த வினாவை ஒவ்வொருவரும் தமக்குள்ளே கேட்டுப் பார்த்தல் வேண்டும். ஆடவர், மகளிர் இருசாராருமே தம் மனத்தை மாசு அடையாமற் பாதுகாக்க வேண்டும்; அதுவே நல்லொழுக்கம் வளர்தற்கு அடிப்படை. இப்படித்தான் நம் சான்றோர் கூறுகின்றனர்.

'மனத்துக் கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்' என்று கூறிய திருவள்ளுவர் திருவாக்கை ஒட்டிப் பரிமேலழகர் அறத்துப் பாலைக் கூர்ந்து நோக்குகின்றார். "தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப் பட்டது" என்று எழுதுகின்றார். ஒழுக்கந்தான் அறம் என்பது வள்ளுவம். ஒருவன் உயிரைவிடப் பெரிதும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று கருதத்தக்கது ஒழுக்கமே என்பது குறட்கோட்பாடு. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்ற சொற்கள் இதயப் பேழையில் பொன்னே போற் போற்றத் தகுந்தவை. 'எப்படியும் வாழலாம்' என்று எண்ணும் மனநிலை மாறவேண்டும்; 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்னும் உறுதியுடன் வாழ்வதுதான் வாழ்வியல் அறம்.

மனம் ஒரு மலர்; மெல்லியது; நுட்பமானது. அதனை வாடாமல் வதங்காமல் பாதுகாத்து வருதல் வேண்டும். அவ்வாறு உள்ள மனம் என்ற மலரில்தான் இறைநிலை குடிகொள்ளும் என்கின்றனர் தமிழ் முன்னோர். 'உள்ளக் கமலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை உணர்தற்கென்றே உலக வாழ்வு கொடுக்கப்பட்டது' என்பார் தமிழ் முனிவர் திரு. வி. க. இவ் வாழ்வை இயற்கை நெறி என்னும் சமய நெறியில் நின்று ஒழுங்குபெற நடத்துதல் வேண்டும் என்பது அவர் கோரிக்கை. 'உலகில் சமயங்கள் பலவாக இருக்கின்றனவே; அவற்றுள் எதனைப் பற்றிநின்று வாழ்வது' என்ற வினா இதனைக் கேட்கும் நெஞ்சங்களில் தோன்றாமல் இருக்குமா ? யாரும் எந்தச் சமயத்திலும் நின்று வாழலாம்; வாழ உரிமை உண்டு. 'எவர்க்கு எச்சமயத்தில் விருப்பம் தோன்றுகிறதோ அவர் அச்சமயத்

தில் நின்று ஒழுகலாம்; சமய வாதத்தில்மட்டும் ஈடுபடலாகாது! அவ்வச் சமயவழி நின்றொழுகினால் முடிவில் எல்லாம் ஒன்றாகவே தோன்றும்'. இந்தச் சொற்கள் ஒவ்வோர் இந்தியன் உள்ளத்தும் நிலை கொள்ள வேண்டும்; இந்தியச் சமயங்கள் ஒழுக்கம் உயிர்நிலை எனக் கொண்ட சான்றோர்களின் பொதுநிலைச் சிந்தனைகளினின்றும் பூத்த புது மலர்கள்; அவை அனைத்தும் ஒழுக்கத்தை அல்லவா வற்புறுத்து கின்றன! அவரவரும் அவ்வச் சமயப்படிகளில் நின்று ஒழுகுவது, தனி மனித வாழ்வுக்கும், சமுதாய வாழ்விற்கும் அடிப்படைத் தேவை என்று சொல்லவும் வேண்டுமோ?

"புண்ணியம் செய்து நல்ல புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம் இப்பிறப் பறுக்கும் அப்பால்
திண்ணம்நாம் அறியச் சொன்னோம் செறிபொழில் அனந்த புரத்து
அண்ணலார் கமல பாதம் அணுகுவார் அமர ராவார்."

இந்த அமுத மொழிகள் பொதுநிலை வழிபாட்டை அல்லவா வற் புறுத்துகின்றன! நம்மாழ்வார் நன்மொழி இது.

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்றென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயில் கொள்வானே."

ஆம்! இது தெய்வத் திருமூலரின் பொதுநெறிப் பாட்டு.

"நீங்கள் விசுவாசம் உடையவர்களாய் ஜெபத்தில் எவைகளைக் கேட்பீர்களோ, அவைகளையெல்லாம் பெறுவீர்கள்;" "ஜெபத்தில் உறுதி கொள்ளுங்கள்; ஜெபம் உண்மையாகவே ஒருவரைத் தீயொழுக்கத்தினின்றும் காக்கும். அல்லாவைத் தியானிப்பது மிகப் பெரியது" (மத்தேயு; 21 : 45. திருக்குரான் 29 : 45) என்ற கிறித்தவர் பொதுமறையும், இஸ்லாமியர் திருமறையும் எவற்றை வற்புறுத்துகின்றன? ஆழ்நிலைத் தியானமும், ஒருமைப்பாடுமே இறையருள் நெறிக்கு அடிப்படைகள் என்பனவே வற்புறுத்தப் பட்டமை காணலாம். ஆகவே சமய ஒழுக்கம் என்று கூறும்போது, அது பொது ஒழுக்கத்திற்கு மாறுபட்டது எனறு எண்ணி விடாதீர்கள். பொது ஒழுக்கமே இங்குச் சமய ஒழுக்கம் என்ற பெயர் சார்ந்து நிற்கின்றது,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி"

என்ற வள்ளுவர் திருவாக்கை, இந்த இனிய வைகறைப் பொழுதில் நேயர்களின் நெஞ்சிற்கு நினைவுபடுத்துகிறேன். வாழ்வில் ஒழுக்கம் என்பது உயிர்நிலை; அதனை இன்சொல், அழுக்காறு

இன்மை, ஆசையின்மை, தீவினைகளை நினைக்கவும் அஞ்சுதல் முதலிய பண்புகள் உரமிட்டு வளர்க்கின்றன. இன்றைய சமுதாயத்தில் இந்தப் பண்புகள் செழித்து மலர்கின்றனவா?

பேருந்துகளில் பயணம் செய்யும்போது நாகரிகப் பண்பு எத்துணை பேரிடம் உள்ளது என்று ஒரு சிறிது உற்று நோக்குங்கள்! இரண்டிடங்களைத் தாமே ஆக்கிரமித்துக் கொள்ளுதல், இடம் விழைவாரிடத்து வன்சொற் பேசல், நாகரிகமின்றி வாய் கூசாமல் தீய சொற்களை நாணமின்றிப் பேசல், மகளிர் இருக்கைகளை வேண்டுமென்றே சார்ந்து நிற்றல், கற்புடைப் பெண்கள் கேட்கக் கூசும் தீமொழிகளை வரம்பின்றிப் பேசல் முதலிய செயல்களை இளந்தலைமுறையினரிடத்துப் பெரும்பாலும் காணுவது இன்று இயல்பாகி விட்டது. திருக்குறள் முதலிய நீதிநூற் கருத்துகளை ஆழ்ந்து சிந்திக்கும் போக்கு, வரவரக் குறைந்து வருகின்றமை கண்கூடு.

நம் சான்றோர் திருமொழிகளை வெறும் இலக்கண இலக்கியக் கண்கொண்டு பார்த்தல் மட்டும் போதாது; இயற்கைக் கண் கொண்டும், வாழ்வியற் கண் கொண்டும் அவற்றை நோக்குதல் வேண்டும். அற ஒழுக்கம் பிறழாத மக்கள் வாழ்வு நம் தாயகத்தில் மீண்டும் மலர வேண்டும். பிறர் வாழத் தாமும் வாழும் மன விரிவு செழிக்க வேண்டும். நல்லொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதும் அக நாகரிகம் பரவ வேண்டும். இந்த விழைவுகளும், எதிர் பார்ப்புகளும் வரும் புதிய ஆண்டில் நிறைவேறுமா? ஆண்டின் புதிய வரவுதான் இதற்கு விடைதர வேண்டும்!

கடமையும் கட்டுப்பாடும்

பொதுவாகச் சட்டத்திற்கு மதிப்பும் பெருமையும் இல்லையானால் எந்தப் பொது அமைப்பும் சீராக நடைபெற முடியாது. நாட்டின் ஆட்சிக்கு மட்டும் அல்லாமல் நகர்மன்றம், தெருச் சங்கம், கல்விக் கழகம், குடும்பம் முதலிய எந்த அமைப்புக்கும் இந்த உண்மை பொருந்துவதாகும். எந்தக் குடும்பத்தில் எல்லோரும் பொதுவிதிகளுக்குக் கட்டுப்படுகிறார்களோ அந்தக் குடும்பம் நன்றாக முன்னேறும். அவ்வாறே எந்தப் பொது நிலையத்திலும் பொதுவிதிகளுக்குத் தலை வணங்குகின்றவர்கள் பலர் இருப்பார்களானால் அந்த அமைப்பு நல்ல வளர்ச்சிபெறும். இல்லையானால் குடும்பம் முதல் நாடு வரையில் ஏமாற்றம், வஞ்சகம், குழப்பம், அழிவு என்பன நிலவுமே அல்லாமல், ஆக்கம். ஒற்றுமை, ஊக்கம், உயர்வு என்பன விளங்குவது இல்லை.

—முனைவர் மு. வரதராசனார்
மண்ணின் மதிப்பு பக். 223.

நாவலா? நாகமா?

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

சங்க நூலான நற்றிணை 82ஆம் பாடலில் ''போகிய நாகம் போக்கருங் கவலை'' என்ற ஆருவது வரியில் நாகம் என்ற மரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்பில் 'நாகம்' என்றே இந்த மரத்தின் பெயர் கூறப்பட்டுள்ளது. ஆனல் ஔவை துரைசாமிப்பிள்ளை மேலும் சில சுவடிகளை ஆராய்ந்து எழுதிய விரிவான அரிய பதிப்பில் ''போகிய நாகப் போக் கருங்கவலை'' என்ற வரிக்குப் பாடமாற்றமாக உள்ள ''போகிய நாவற் போக்கருங் கவலை'' என்ற வரியையே மூலப் பாட்டில் காட்டியுள்ளார். ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் எடுத் தாண்டுள்ள 'போகிய நாவற் போக்கருங் கவலை' என்ற வரியில் வரும் 'நாவல்' என்பது பொருத்தமானதா அல்லது பின்னத்தூரார் பதிப்பில் காணப்படும் 'நாகம்' என்பது பொருத்தமானதா என்பதைக் கவனிக்கவேண்டும்.

சங்க நூல்களில் நாவல்மரம் நெய்தல் நிலத்திலும் மருத நிலத்திலும்தான் பொருத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

''அகலிலை நாவல் உண்டுறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்'' —அகம். 380

''பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி'' —நற்றிணை 35

''மட்டறல் நல்யாற்று எக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்'' —புறம். 177

மேற்காட்டிய பாடல்களில் நாவல்மரம் கடற்கரையிலும் ஆற்றுக்கரையோரத்திலும் கூறப்பட்டதைக் காணலாம்.

நற்றிணை 82ஆம் பாடல் குறிஞ்சித் திணைப் பாடலாக உள்ளது. முருகு புணர்ந்தியன்ற வள்ளியும், சிறுகண் காட்டுப்பன்றியும், கானவரும் இப் பாடலில் கூறப்படுவதால் இப் பாட்டு குறிஞ்சித் திணைப் பாட்டே என்று கொள்ளவேண்டும். குறிஞ்சித்திணையில் நாவல்மரம் கூறப்படவில்லை. ஆனல் நாகமரம் கூறப்பட்டுள்ளது.

''நறுவீ யுறைக்கு நாக நெடுவழி''
—சிறுபாணாற்றுப்படை-வரி 88

''நாகநீண் மணிவரை நறுமலர் பலவிரை இக்
காமரு வையை கடுகின்றே கூடல்''
—பரிபாடல் திரட்டு-வரி 203

"......................மேன்மலை முற்றித்
தளிபொழி சாரற் றதர்மலர் தாஅய்
ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்" —பரிபாடல் 12-4

"நாக நறுமல ருதிர யூகமொடு"—திருமுருகாற்றுப்படை 302

நற்றிணையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் திருமுருகாற்றுப் படையிலும், பரிபாடலிலும், நாகமரம் மலையிலும் மலைச்சாரலிலும் காணப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். சிறுபாணாற்றுப்படை நாக நெடுவழி என்று கூறியுள்ளதைக் காணலாம்.

"வார்தல், போகல் ஒழுகன் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள"

என்று வரும் தொல்காப்பிய உரியியல் சூத்திரத்தில் போகல் என்ற சொல் நெடுமை என்ற பொருளில் வருவது சுட்டப்பட்டுள்ளது. "வெள்வேல் விடத் தேரொடு காருடை போகி" (பதிற்றுப்பத்து) என்ற பாடலையும் சேனாவரையர் எடுத்துக்காட்டியுள்ளார். சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் (118-123) 'போகு' என்பதற்கு நெடுமை என்று பொருள் கூறியுள்ளதைக் காணலாம்.

நெடுவழியில் நாகமரங்கள் மிகுந்து காணப்பட்டதையே கூறப்பட்டுள்ளதைக் காணலாம். மலைக்காடுகளிலே நாகமரங்கள் ஒரே இனமாக, சூழலாக நிறைந்து காணப்படுவதைச் செடி நூலார் கண்டு கூறியுள்ளனர். நாகமரத்தை (Messua Ferrea) என்று செடி நூலில் அழைப்பர்.

"In the evergreen forests of Madras State Messua Ferrea often form consociation which may cover a considerable area"

—Manual of Forest Indian Botany
—N. L. Bor (O. U. P.)

எப்போதும் பச்சிலைகளாகவே காணப்படும் காடுகள் (Ever green forests) மலையில் மிக உயரத்தில் காணப்படுகின்றன. இலையுர் காடுகள் (Deciduous Forests) அதற்குக் கீழே காணப்படுகின்றன. மலைகளில் பச்சிலைக் காடுகளில் இயற்கையில் நாகமரங்கள் ஒரே இனக் கூட்டமாக (Consociation) நெடுந்தொலைவு காணப்படுவது முக்கிய செய்தியாகும். இதையே நற்றிணைப் பாடல்,

"போகிய நாகப் போக்கருங் கவலை"

என்று போகும் வழியெல்லாம் உள்ளே போகமுடியாதபடி அடர்ந்து நாகமரம் இருந்த, கவர்ந்த சூழலைக் கூறியுள்ளது வியப்பைத்தரும்

செய்தியாகும். வனப் பாதுகாப்புத் துறையார் (Foresters) இச் செய்தியைப் படித்தால் இந்த இயற்கைச் செய்தியைக் கூறியதின் நுட்பத்தை நன்கு உணர்ந்து மகிழ்வர். ஆதலின் நாகமரங்களே ஒரே இனமாக வழியெல்லாம் சூழலாக வளர்ந்து இருந்ததையே கூறும் செய்தியிலிருந்து நாகம் என்ற பாடமே சரியானதாகும் என்பதில் ஐயமில்லை.

இதே நற்றிணை அ௨ஆம் பாட்டில்

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
சேரு டிரும்புறம் நீறெடு சிவண
வெள்வசிப் படீஇயர் மொய்த்தவள்பு அழீஇக்
கோணாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யோனே"

என்ற வரிகள் வருகின்றன. ஒளவை துரைசாமிப் பிள்ளை கோணாய் என்பதற்கு வேட்டைநாய் என்று பொருள்கொண்டு காட்டுப் பன்றியை வலையில் வீழ்த்திக் கொன்று அதன் உடலைக் கானவர் கொண்டுபோகும் சிறுகுடி என்று உரை எழுதினார். இங்கு கோணாய் என்ற சொல்லுக்கு வேட்டைநாய் என்று பொருள் கொண்டது பொருத்தமில்லை. கோணாய் என்பது ஒருவகைக் காட்டு நாயாகும். இதை Wolf என்று அழைப்பர். இந்த நாய்கள் காட்டுப்பன்றியைக் கொன்று கொண்ட கொள்ளை இறைச்சியைக் கானவர் பெயர்த்துச்சென்ற அதாவது கவர்ந்து சென்றதையே மேற்காட்டிய வரிகள் கூறுகின்றன. இவ்வாறு செந்நாய்கள் வேட்டையாடிக் கொன்று மிஞ்சிய இறைச்சியைக் கானவர் கவர்ந்தது சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது.

"ஓய்பசிச் செந்நா யுயங்குமரை தொலைச்சி
யார்ந்தன வொழிந்த மிச்சில் சேய்நாட்
டருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி யாகும்" —நற்றிணை 43

"வேட்டச் செந்நாய் வேண்டா தொழித்த
காட்டுமா வல்சியர் கரந்தை பாழ்பட"
—பெருங்கதை, உஞ்சைக் காண்டம் கதை 52, 75-76 வரிகள்

மேற்காட்டிய பாடல்களில் செந்நாய் வேட்டையாடி உண்டு மிஞ்சிய இறைச்சியை மனிதர் கவர்ந்தது கூறப்பட்டுள்ளது. அது போன்றே கோணாய் (Wolf) கொன்ற காட்டுப்பன்றி இறைச்சியை அந்தக் கோணாய்களிடமிருந்து கானவர் கவர்ந்ததையே நற்றிணைப் பாடல் கூறியுள்ளது. "கானவர் பெயர்க்கும்" என்ற வரி தெளிவாக இச் செய்தியையே குறிப்பிட்டுள்ளது. களவழி நாற்பதும் பழமொழியும் கோணாயைப்பற்றிக் கூறியுள்ளன.

"குடற்கொண்டு வாங்குங் குறுநரி கந்தில்
தொடரொடு கோணாய் புரையும்மடர் பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து" —களவழி நாற்பது 34

"......................வெறியொலி
கோநா யினம் வெரூஉம் வெற்ப புலம்புகின்
தீநாய் எழுப்புமாம் எண்கு" —பழமொழி 292

இப் பாட்டுகளிலிருந்து பழந்தமிழர் கோநாயைத் தெரிந்தே வைத்திருந்தனர் என்பது தெளிவாகின்றது. மிக முந்தியதாகக் கூறும் சங்க நூல்களில் இந்த நற்றிணைப் பாடலில் மட்டும்தான் குறமகள் வள்ளியைப்பற்றிக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சங்க நூல்களில் காணப்படும் பாடமாற்றங்களைச் சரிபார்க்கவும் இயற்கைச் செய்திகளின் உண்மைகளை நன்கு புரிந்துகொள்ளவும் இயற்கையைப் பற்றிய அறிவியலறிவு (Scientific Nature Study) இன்றியமையாதது என்பது தெளிவாகிறது.

பேராசிரியர் இராதாகிருட்டிணன் குடும்பநல நிதி

17—1—84இல் காலமான, தமிழ்க்கடல் மணி, பேராசிரியர் திருச்சி இராதாகிருட்டிணன் அவர்கள் தமிழுக்கும் ஆன்மீகத் துறைக்கும் தொண்டாற்றிய பெருமகனார் என்பதும், அவரது உழைப்பால் மாணவர் உலகமும் ஆசிரியர் உலகமும் பெரும்பயன் பெற்றன என்பதும் தமிழ் அன்பர்கள் அறிந்ததே. எட்டுக் குழந்தைகளும், இல்லத்தரசியும் வயது முதிர்ந்த அன்னையாருமாக அமைந்த அக் குடும்பம் இடர்ப்படாது வாழச் செய்வது தமிழ்க் குமுகாயத்தின் கடமையாகிறது. இப் பேராசிரியர் தம் வாழ்நாளில் தமக்கு நிதி திரட்டுவதைத் தடுத்துவிட்ட தகைமையாளர். எனவே, இப்போது அவர் தம் குடும்பத்திற்கேனும் உதவிபுரியக் கருதிச் சான்றோர் பலர், அவரது குடும்ப நல நிதி திரட்ட முன்வந்துள்ளனர். அன்பர்கள் கீழ்க்காணும் முகவரிகளில் ஏதேனும் ஒன்றுக்கு நன்கொடைகளை அனுப்பி உதவுமாறு, பேராசிரியர் இராதாகிருட்டிணன் குடும்பநல நிதிக் குழுவின் தலைவர் திரு. அ. வெ. ர. கிருட்டிணசாமி ரெட்டியார் கேட்டுக் கொண்டுள்ளார்.

நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரிகள் :

திரு. சோ. சத்தியசீலன், எம். ஏ.
(செயலாளர்)
55 சேதுராம பிள்ளை காலனி,
திருச்சிராப்பள்ளி, 620020.

திரு. பி. என். சேதுராமன்
(பொருளாளர்)
494 பெரியகடை வீதி,
திருச்சிராப்பள்ளி, 620008.

உலக வழக்கில் இலக்கண அமைதிகள்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

பண்டைத் தமிழிலக்கணங்கள் இயற்றிய பெருமக்கள் வழக்கும் செய்யுளும் நாடியே இலக்கணம் வகுத்தனர். செய்யுள் வழக்குகள் முழுதும் அவர்களின் பார்வையில் பட்டிருப்பினும் உலக வழக்குகள் முழுமையாக அவர்களால் தொகுக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. செய்யா, செய்யூ, செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களைப் பயன்படுத்தும் இலக்கியங்களும் பேச்சு வழக்குகளும் முழுமையாகத் தமிழில் மறைந்துவிட்டன. சிந்துவெளித் தமிழிலிருந்து வடபுல மொழிகளும் தமிழிலிருந்து திரவிட மொழிகளும் பிரிவதற்கு முன்பு செந்தமிழ்நாட்டுப் பேச்சுவழக்காகவோ கொடுந்தமிழ்நாட்டுப் பெருகிய வழக்காகவோ இருந்த இவ் வாய்பாட்டு வினையெச்சங்கள் செந்தமிழில் காணக் கூடாவிடினும் ஒருசார் பேச்சுத்தமிழிலும் திரவிட மற்றும் வடபுல மொழிகளிலும் காணப்படுகின்றன.

1. அல்லீற்று வியங்கோள் :

> ''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
> மக்கட் பதடி எனல்''

என்னும் குறட்பாவில் 'பதடி எனல்' (எனல்—என்க) என உடன் பாட்டு வியங்கோளீருக 'அல்' வந்துள்ளது. அல் = பொருந்து, பொருத்து என்னும் வேர்ப்பொருளில், செயல் ஈடேறட்டும் என்னும் கருத்து புலப்படுத்துதற்காக உடன்பாட்டு வியங்கோள் ஈருக 'அல்' வினையொடு புணர்ந்தது. அல் = நெருங்கியது, அடுத்தது, மற்றையது, முந்தையதல்லாதது என்னும் வேர்ப்பொருளில், இல்லாதது, இல்லை, கூடாது என்னும் கருத்து புலப்படுத்துதற்காக எதிர்மறை வியங் கோள் ஈருகவும் 'அல்' வினையொடு புணரும். அல்லீற்றியல் லகர மெய்யிறுதி கெட்டு 'அ' ஈறே அப்பொருளுணர்த்துதலும் உண்டு என்பதற்கு, நெல்லுயர (நெல்லுயரல் = நெல்லுயர்க) வரப்புயர (வரப்புயரல் = வரப்புயர்க) என்னும் வாழ்த்து மொழிகளைப் பாவாணர் எடுத்துக் காட்டுவார். இவற்றில் உயர என்னும் வினைமுற்று லகர மெய்யிறுதி கெட்ட அல்லீற்று வியங்கோள்.

இத்தகைய வியங்கோள் வினைமுற்றுகள் தமிழ்நாட்டில் எல்லா விடங்களிலும் பேச்சு வழக்கில் பெருக இடம்பெற்றுள்ளது. ஒருவரை யொருவர் வசைமாரி பொழியும்போது, உனக்கு நோவு வர, உனக்குச்

சாவு வர, உன் தலையில் இடி விழ, எனத் திட்டுதலைக் காணலாம். விழல்—விழ (விழட்டும்), வரல்—வர (வருக, வரட்டும்) என ஈற்று மெய் கெட்டது.

'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயங்கும் இடம்பால் எங்கும் என்ப'' (நன். 338)

என்ற பவணந்தியார், அல்லீற்று வியங்கோளைக் குறிப்பிடவில்லை. உரையாசிரியர் உரையிற் கோடல் என்னும் உத்தியால் ''நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க'', ''மக்கட் பதடி எனல்'', ''மனத்துக்கண் மாசிலனுதல்'' என அ, அல், தல் என்பனவும் வியங்கோள் ஈறுகளாக வருமெனக் கொள்க'' எனக் குறிப்பிட்டிருக் கிறார். மாசிலனுகல் என்பதே மாசிலனுதல் என ஆளப்படுதலின் (ஒ. நோ: ஆகு—ஆது, போகு—போது) 'தல்' ஈறு வியங்கோளீறாகக் கொள்ளப்படாது என்பார் பாவாணர்.

கன்னடம், தெலுங்கு ஆகிய திரவிட மொழிகளில் அல்லீறு இன்றும் இருவகை வழக்கிலும் மற்றொரு இகர ஈறும் பெற்று வியங் கோளீறாக நின்று நிலவி வருகிறது.

(அ) உடன்பாட்டு வியங்கோள்:

க. தரலி (தரல் + இ = தரட்டும்)
வரலி (வரல் + இ = வரட்டும்)

தெ. சேயனி (செயல்—செயலி—சேயலி—சேயனி = செய்யட்டும்.)
பண்டனி [பண்டல் (விளைதல்)—பண்டலி—பண்டனி = விளையட்டும்.]

(தொடரும்)

மதுரை மாவட்ட நூலகர்கள் வெள்ளி விழா

மதுரை மாவட்ட மைய நூலகத்தில் 3. 2. 1984 அன்று, இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து, பதவி உயர்வு பெற்றுள்ள ஆய்வாளர் திரு. இரா. பெரிய நாயகம், நூலகர் திரு. கிருட்டிணன் ஆகிய இருவருக்கும் பாராட்டு விழா நடைபெற்றது. அரசு பொது நூலகர்கள் சங்க அமைப்பாளர் திரு. பி. சந்திரசேகரன் வரவேற்புரை யாற்றினார். விழாவிற்கு மாவட்ட நூலக அலுவலர் திரு. ப. ஆறுமுகம் தலைமை ஏற்றார். திரு. பெரியநாயகம் அவர்கட்குத் 'தாய்' ஆசிரியர் திரு. வலம்புரிஜான் பொன்னாடை போர்த்திச் சிறப் பித்தார்.

பெண்மைக் காவலர்—திரு. வி. க.

[டாக்டர் சரளா ராசகோபாலன், எம், ஏ., பிச். டி.,

தமிழ்த்துறை, இராணிமேரிக் கல்லூரி, சென்னை.]

மனிதனுக்கு ஆக்கம் தரும் இன்றியமையாத பொருளையெல்லாம் பெண்ணாகவே ஆன்றோர் நினைத்தனர். எழுமையும் பயன் தரும் கல்வியைக் கலைமகள் என்றனர்; பொருளற்றவரைப் பொருளாகச் செய்யும் செல்வத்தைத் திருமகள் என்றனர்; வெற்றி தரும் வீரத்தை 'துர்க்கை' என்றனர்; என்றும் அழியா ஞானத்தைப் 'பரை' என்றனர்; வளம் குறையாக் காட்டை 'வன தேவதை' என்றனர். தம்மையும் உயிர்களையும் ஈன்று உய்யும் மண்ணைத் 'தாய்நாடு' என்றனர், இறைவனையும் பெண்மையும் ஆண்மையும் இணைந்த அம்மையப்பனாக, உமாபதியாக, (அர்த்த நாரீசுவரனாக) பெண்ணொருபாகனாக (லட்சுமிபதியாக,) திருவுறை மார்பனாக ராதாகிருஷ்ணனாக, சீதாராமனாகக் கண்டனர்.

திரு. வி. க. வின் பார்வையில் பெண்மை :

இந்தச் சமுதாயப் போக்கின் வழிவந்த திரு. வி. க வும் பெண்மையைக் காண்கிறார். அவர், ''அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றே பெண்மையாம்'' என்று பெண்மைக்கு விளக்கம் கூறுகிறார். (பெண். பெருமை. 12) பெண்ணையே தெய்வமாகக் கொண்டாடுகிறார் (பெ. பெ. 14) பெண் என்ற தமிழ்ச்சொற்கு அழகு என்றே பொருள் விரிக்கின்றார். உலகில் உள்ள அழகெல்லாம் ஒன்று திரண்டு பெண்ணாகியது என்கிறார். ''நீலவானத்தில் திங்கள் போலவும் மலையில் பொழில் போலவும், பசுங்கொடியில் மலர்போலவும், மலரில் நிறம் போலவும், பறவைகளில் மயில் போலவும், விலங்குகளில் மான்போலவும் பெண் எனினும் அழகு இல்லையேல் இவ்வுலகில் அழகு ஏது ?'' (பெ. பெ. 15) என்று உலக அழகே பெண்ணழகு என்று சிறப்பிக்கின்றார். ''அழகுக் கடவுளே பெண்ணாகி எங்கும் காட்சி அளிக்கிறது'' எனப் பெண்ணையே அழகுக் கடவுளாக்குகிறார். (பெ. பெ. 15.)

பெண்ணடிமை :

''ஆண்மகன் பெண்மகளைக் காமப் பொருளாகவும் பணியாளாகவும் கொண்ட நாளிலிருந்துதான் பெண் அடிமையாக்கப்

பட்டாள்." (பெ. பெ. 21) என்று பெண்ணடிமைக்குக் காரணம் காட்டுகிறார் திரு. வி. க. அவர்கள். (பெ. பெ. ப. 28) "நமது நாடு அடிமைப் பட்டிருந்ததற்கே காரணம் பெண்ணடிமைதான்" என்கிறார் (பெ.பெ ப. 31). "ஒரு நாட்டின் நாகரிகமே பெண்களின் நிலையை வைத்துத்தான் கணிக்கப்படும்" என்று வரலாற்றுண்மையைச் சுட்டு கிறார் (பெ. பெ. 28). "பண்டைப் பெண்கள் தம் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் போதிய கல்வியறிவும் பெற்றிருந் தனர்" (பெ. பெ, ப. 35) என்று முன்னைய நிலையைக் காட்டி வழிப்படுத்துகிறார். "பெண்ணுரிமையில்லா நாடு பக்கவாயு உடை யானை ஒத்தது" என்று கூறுகிறார். 'பக்கவாயு உடையவன் இருந்தும் சரிவர இயங்க முடியாயல் இருத்தல் போல பெண்ணுரிமை யில்லா நாடும் சரிவர இயங்க முடியாது" என்கிறார். (பெ. பெ. ப. 31). பாரதியும் இந்நிலையை,

> "கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
> காட்சி கெடுத்திட லாமோ"

என வினவும் கேள்வியில் பெண்ணடிமை சுட்டப்படுகிறது.

ஆறறிவுடைய மனிதனைத் தவிர மற்ற உயிர்கள் பெண் ணினத்தை அடிமைப்படுத்தா நிலைகண்டு வேதனைப் படுகிறார் திரு. வி. க. "புல் செடி கொடிகளில் ஆணினம் தன்தன் பெண்ணினத் தின் உரிமையைத் தகைந்திருக்கிறதா? ஆண்பறவை பெண்பறவை யின் உரிமையைக் கெடுத்திருக்கிறதா? எவ்வுயிராவது தன் பெண்ணினத்தின் உரிமையை உடைத்திருக்கிறதா ? அஃறிணை உலகில் பெண் உரிமைக்குப் பழுது நேர்ந்ததில்லை. பாழான ஆறறி வுடைய உயர்திணை உலகிலேயே பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது" (பெ. பெ. ப. 27) என்று திரு. வி. க. அவர்கள் தமக்கே உரிய கவிதை நடையில், பெண்மையை அடிமைப்படுத்திய ஆண்மையைக் கண்டிக்கிறார்.

திரு. வி. க.வும் பெண்ணுலகத் தொண்டும் :

திரு. வி. க. அவர்களின் வணங்காமுடி பெண்மையின் உருவத் திற்கு மட்டுமே வணங்கியது; அவர் செந்நா பெண்ணின் பெருமை யையே எந்நேரமும் பேசியது; அவரின் அருட்கண்கள் பெண் மையைத் தாய்மையின் கனிவோடு நோக்கின; அவருடைய வணக் கத்திற்குரிய கைகள் இறையாய் விளங்கும் பெண்மையையே தொழுதன. அவருடைய நெஞ்சமோ பெண்களின் துயரங்களை நினைந்து நினைந்து உருகியது. துன்பம் தீர்க்கடைப்பிடிக்க வேண்டிய வழிகளையும் நாடியது.

ஆண்கள் பெண்களைப் பழிப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்த காலத்தில் திரு.வி.க. அவர்கள் மட்டும் ஏன் பெண்ணொளி பரப்ப விழைந்தார்? வீழ்ந்த பெண்ணுலகை ஏன் எழுப்பி நிற்க வைக்கத் தொண்டாற்றினார்? என்ற வினா எழுதல் இயல்பே. அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் இதற்கு விடையாக அமைகின்றன.

''பலரிடத்தில் பாலுண்டமை, இளமையில் பெண்களுடன் விளையாடியமை, பெண்களிடத்தில் கல்வி கற்றமை ஆகிய காரணங்கள் பெண்ணின் பெருமை வளர வாய்ப்பு தந்தது'' என்று தம் வாழ்க்கைக் குறிப்பில் கூறுகிறார் திரு. வி. க. (ப. 750—751)

பெண்ணுலகின் பெருமையைத் திரு. வி. க. விற்கு உணர்த்தியவர் அவர் துணைவியார் கமலாம்பிகை அம்மையாரே ஆவர். அவர் ஆறே ஆண்டுகள் தம் மனைவியுடன் இல்லறம் நடத்தினார். அந்த ஆறு ஆண்டுகள் அவர் என்றென்றும் நினைவில் நிறுத்திய நாட்கள். அவர் தம் மனைவியின் மறைவின்போது தம் அன்பு உள்ளத்தைப் புலப்படுத்துகிறார். ''மின்னல் என்தலையில் வீழ்ந்து உடலிற் பாய்ந்து கால் வழியே ஓடியது; மண்ணும் விண்ணும் ஒரே சூழல்; கண்களில் தாரை தாரை; கமலத்தின் ஆவி சோர்ந்தது; என் அம்பிகையின் ஆவி சோர்ந்தது; என் கமலாம்பிகையின் ஆவி சோர்ந்தது; ஓருயிர் ஈருடல் என வாழ்ந்தோம். ஓருடல் போயிற்று; அமிழ்தம் சுவையென இருந்தோம். அமிழ்தம் போயிற்று'' (வா. கு. ப. 71)என்று அவர் வேதனையுடன் கூறுகின்றார்; திருக்குறள் படிக்காத தம் மனைவிதான் திருக்குறளாக விளங்கினாள்; திருக்குறள் நுட்பமே துணைவியால்தான் உணர முடிந்தது. பின்னாளில் திருக்குறள் விரிவுரை எழுதுவதற்கே இல்வாழ்க்கையின் அனுபவம்தான் பெருந்துணையாக அமைந்தது என்று தம் துணைவியைப் பெருமைப்படுத்திப் பேசுகிறார். (வா. கு. ப. 704) தமக்குப் பொறுமையைச் சொல்லித் தந்தவளே மனைவிதான்; தம் பண்பு நலன்களை உருவாக்கியவளே தம் மனைவிதான் என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறார். (வா. கு. ப. 705) தம் ஆருயிர்க் கமலாம்பிகையின் மறைவிற்குப்பின் அவளுக்காகவே தம் வாழ்வைப் பெண்ணின் பெருமை விளங்க, பெண்ணுலகத் தொண்டாற்ற முனைந்ததாகக் கூறிக்கொள்கிறார். (வா. கு. ப. 720) பெண்மையைத் தாய்மையாய், இறைமையாய்க் காண்பதற்கே காரணம் துணைவியர்தாம் என்கிறார். (வா. கு. 713) திரு. வி. க. அவர்கள் இயற்கையாகவே பெண்ணை மதிப்பவர். பள்ளியை விடுத்த காலத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. பின் இல்வாழ்க்கைச் சிறப்பால், கமலாம்பிகையின் துணையால் பெண்மையைப் போற்றும் நிலை பெற்றார்.

பெண்ணடிமை மிக்கிருந்த காலத்தில் பெண்மையின் அவல நிலையைப் போக்க, திருஞான சம்பந்தர் தோன்றினர். தமிழன் கண்ட பெண்ணின் பெருமையை நிலைநாட்டப் பிறந்தவர் அப் பெரியார். அவர் எடுத்த எடுப்பிலேயே 'தோடுடைய' என்று தம் பாடலைத் தொடங்கினர். ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்று பாடிய பெருமை ஞானசம்பந்தருக்கே உரியது. எனவே திரு. வி. க.வுக்கு ஞானசம்பந்தர் தூக்கி நிறுத்திய கொள்கையில் இளமையிலேயே தோன்றிய ஈடுபாடு, வாணாள் முழுதும் நிலைத்துவிட்டது. ஞானசம்பந்தரைக் குருவாகத் திரு. வி. க. கொண்டு இருந்தமைக்கு முதன்மையான காரணம் அப் பெருமான் உலகிற்குப் பெண்ணின் பெருமையை எடுத்துக் காட்டினதேயாகும்.

ஆண்வடிவில் பெண்மைக் குணம் பெற்றவர்கள்தாம் உலகில் அடியவர்களாக — அறிஞர்களாக — வீரர்களாக — பாவலர்களாக விளங்கியதாகத் திரு. வி. க. அவர்கள் கூறும் கூற்றிற்கு திரு. வி. க. அவர்களே எடுத்துக்காட்டாகவும் விளங்கினர். திரு. வி. க, அவர்களின் உடல் அமைப்பும் பெண்மையின் மென்மை கொண்டதாகவே அமைந்திருந்தது. பெண்ணியல்பு பெருது கடவுள்நிலை பெறல் இயலாது என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தவர் அவர். (பெ. பெ. ப. 21). ஆண் என்னும் அரக்கனக வாழ்வதைக் காட்டிலும் பெண்ணெனும் தெய்வமாக வாழ்வதில் தமக்கு விருப்பம் இருந்ததாக திரு. வி. க. அவர்கள் நவசக்தியில் (18—12—25) வெளியிட்டுள்ளார். இன்னோரன்ன காரணங்களால் பெண்ணீர்மையில் இயற்கையாகவே ஈடுபாடு கொண்ட திரு. வி. க. அவர்கள் பெண்ணுலகை உயர்த்த விரும்பியதும், தொண்டாற்ற விழைந்ததும் இயல்பானதே.

பெண்மையைத் தம் வாழ்வில் போற்றிய பெருந்தகைமை :

மனைவி உள்ளபோதே பரத்தமை மேற்கொள்ளும் பரத்தர்கள்— மனைவி இருக்கும்போதே மறுமணம் செய்துகொள்ளும் கயவர்கள் இருந்த காலத்தில்தான் திரு. வி. க. அவர்களும் வாழ்ந்தார். ஆறே ஆண்டுகள் மனைவியுடன் வாழ்ந்தவர், பத்திரிகை உலகில் செல்வாக்குடையவர், பல தொழிற் சங்கங்களின் தலைவர், அரசியல் வானில் பேரொளியுடன் வாழ்ந்தவர் என்னும் இன்னோரன்ன தகுதிகளை உடைய இளைஞர் திரு. வி. க. அவர்களை மறுமணம் செய்துகொள்ளப் பலர் வற்புறுத்தினர். பெண் கொடுக்கத் தந்தையர் பலர் முன் வந்தனர். பெண்ணுடன் பொன்னையும் பொருளையும் கொடுப்பதாய் உறுதிமொழிகள் பலவற்றையும் தந்தனர். பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை நீத்த தமிழ்முனிவரோ மறுமண நினைவே இன்றித் தூய்மையாக வாழ்ந்தார். திரு. வி. க. அவர்கள் மறுமணம் செய்து

கொள்ளாமைக்குக் கூறும் காரணங்களைப் பார்க்கும்போது பெண்மையைப் போற்றும் அவருடைய உள்ளச் சிறப்பு புலனாகிறது.

மிகச் சில ஆண்டுகள் வாழ்ந்தாலும் கமலாம்பிகையின் அன்பில் கட்டுண்டவர் திரு. வி. க. அவர்கள். தம் துணைவியின் பருவுடல் மறைந்தாலும் நுண்மை அன்பு கூடவா மறைந்துவிடும்? "அவ்வன்பு ஊனில், உள்ளத்தில், உயிரில் ஊடுருவி இரண்டற ஒன்றி நிற்கும்போது எப்படி இன்னொன்று புக முடியும்;" (வா. கு. ப. 716) என்னும் திரு. வி. கவின் வினாவில் அவருடைய அன்பு வாழ்க்கை புலப்படுத்தப்படுகிறது.

இல்வாழ்க்கைக் கழகத்தில் பயின்ற இவர் தம் மனைவியிடம் கொண்ட காதலால் மற்றவரைத் தாய்தந்தையராக உடன் பிறந்தவராக நினைக்கப் பழகிக்கொண்டதால் மறுமணம் செய்ய இவர் மனம் ஒப்பவில்லை. (வா. கு. ப. 716)

திரு. வி. க அவர்கள் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்னும் கொள்கையர். மறுமண உரிமை ஆண்பாலருக்கு மட்டும் இல்லாமை நடுநிலை நெஞ்சினராகிய அவருக்கு உடன்பாடாகத் தோன்றவில்லை. பெண்மை, கணவனை இழந்த நிலையில் கைம்மை நோன்பு நோற்கின்றது. ஆண்மை மனைவியை இழந்த நிலையில் பெண்மை போலவே கைம்மை நோன்பு நோற்க வேண்டும். இக்கொள்கையினால் தாரமிழந்த அவர் கைம்மை நோன்பு நோற்க விரும்பி, மறுமணத்தை வெறுத்தார். (வா. கு. ப. 717).

பெண்ணுரிமை விரும்பும் இவர், பெண்கற்பை வற்புறுத்துவார். "கற்பிழந்தவள் அழகை இழக்கிறாள்; பெண்மையை இழக்கிறாள்; தாய்மையை இழக்கிறாள்; எல்லாவற்றையும் இழக்கிறாள்". (பெ. பெ. ப. 74) என்று கற்பிழப்பதால் பெண்மைக்கு ஏற்படும் இழிவைப் புலப்படுத்துகிறார்.

பெண்கற்பை வற்புறுத்தும் இவர், ஆண்கற்பையும் வற்புறுத்துகிறார். ஆணுலகில் தூய்மை இல்லை எனில் பெண்ணுலகில் தூய்மை எங்ஙனம் ஏற்படும்? என்று வினவுகிறார். (பெ. பெ. ப. 52) ஒழுக்கத் தூய்மை இருபாலார்க்கும் தேவை என்பதை வற்புறுத்தும் திரு. வி. க. அவர்கள் சொல்வழி செயல்படும் தன்மையராதலின் வாழ்நாள் முழுவதும் தம் மனைவியின் அன்பைத் தவிர வேறொன்றும் நினையாத சிந்தையராய் வாழ்ந்தார்.

(தொடரும்)

———

கிரேக்க அலெக்சாண்டரும் ரோமானிய சீசரும்

[க. பி. கமலையா]

(முன் இதழ் உ௬௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீசரின் குணநலன்கள் :

கிரேக்க அலெக்சாண்டரும் ரோமானிய சீசரும் வரலாற்றில் இடம்பெற்றவர். இருவருக்கும் எகிப்துடன் தொடர்பிருந்தது. அலெக்சாண்டரையொத்த சிறப்புக்குரியவனில்லை யெனினும் ஜூலியஸ் சீசர் ஐரோப்பிய நாடுகளில் இன்றுவரை நிலவிவரும் விடுதலை உணர்ச்சிக்கும் உரிமைப் போராட்டத்துக்கும் தூண்டு கோலாயமைந்தான். ஐரோப்பிய நாடுகளின் நாகரிகம் கிரேக்க-லத்தீன் நாகரிகமே. ஐரோப்பிய மொழிகளும் கிரேக்க-லத்தீன் மொழிகளின் ஊற்றில் செழித்தவை. ருஷ்ய மன்னர் மன்னனைக் குறிக்கும் ஜார் (Tzar, Czar) என்ற சொல்லும் ஜெர்மானிய அரசனைக் குறிக்கும் கெய்சர் (Kaiser) என்ற சொல்லும் சீசர் (Caesar) என்ற லத்தீன் சொல்லின் மாறுபட்ட வடிவங்களே. சீசரின் குணநலன்கள் பலவாகும். சுல்லா (Sulla) வின் கொடுங் கோலாட்சியில் அவனுடைய எதிரிகளில் முன்னணியில் நின்ற வனுடைய மகள் சீசரின் மனைவி. மணமுறிவை மேற்கொண்டு அவளை அகற்றவேண்டும் என்ற சர்வாதிகாரியின் ஆணையை ஏற்றுக்கொள்ள சீசர் மறுத்தான். 'ஒருத்தியை மணந்துகொள் வதோ அகற்றுவதோ, அவனவன் விருப்பத்தைப் பொறுத்தது; 'உள்மனை விவகாரம்' என்பதுவே அவனுடைய கருத்து. ஒருதடவை கடற்பயணத்தின்போது சீசர் கொள்ளைக்காரரிடம் சிக்கிக் கொண்டான். விடுதலைத் தொகையைக் குறிப்பிட்ட கொள்ளைக் காரரிடம் சீசர் தன்னுடைய விடுதலைப்பணம் மிகவும் கூடுதலா யிருக்கவேண்டுமே என்று சொன்னான். எதிர்காலத் திட்டத்தையும் அவன் அவருக்குரைத்தான். தானே கப்பல்கட்டி அவரைச் சிறை பிடித்துக் கடற்பயணக் கொள்ளையை ஒழித்துவிடுவதாகவும் சீசர் சொன்னான். பாம்பே (Pompey) என்ற தலையான எதிரி சிறுமை யாலும் அரசியல் தந்திரக்குறைவாலும் சீசரால் தோற்கடிக்கப் பட்டான். போரில் தன்னிடம் தோற்றுப்போய்ச் சிறைப்பட்ட வர்களை, பாம்பே கொன்று குவித்தான். சீசரே சிறைப்பட்டவரை விடுதலைசெய்தான். ஸ்பெயினையும் ஆசியாவின் சில பகுதிகளையும் கைப்பற்றிய பாம்பேயின் கொடுமை சீசரின் இரக்கம்காட்டும் குணத் துக்கு முன் ஈடுகொடுக்கமுடியவில்லை. சீசரின் காலத்தில் வாழ்ந்த சிசெரோ (Cicero) மேலைநாட்டவர்க்குக் கிரேக்க எண்ணங்களை

அறிமுகப்படுத்தியவன்; தன்னடக்கமுள்ளவன்; செம்மையாக எழுதுதல், எழுதும்நடையும் முறையும் என்பவைபற்றி மேலைநாட்டு எழுத்தாளர்க்கு சிசெரோ வழிகாட்டியாவான். ஆங்கிலத்திலோ பிரெஞ்சிலோ வழுவின்றி வாக்கியம் புனையும் ஒருவன் சிசெரோ வுக்குக் கடமைப்பட்டவன். 'சிசெரோவின் உரைநடை கண்கூடாக மனித இனத்தின் உரைநடையாகும்,[2] என்ற வழக்கு அறிஞர்க்குத் தெரிந்ததே. சீசர், சிசெரோவை மதித்து அன்பு காட்டினான். சிசெரோவின் பேச்சுத்திறன் சீசரை ஈர்த்தது. குற்றம்சாட்டப்பட்ட லிகாரியஸ் (Ligarius) என்பவன் சாகவேண்டியவனே என்றுரைத்த சீசர் அவனுக்காக வாதாடவந்த சிசெரோவின் பேச்சைக் கேட்க விரும்பினான். சிசெரோவின் பேச்சு சீசரின் பல உணர்ச்சிகளை வெளிப்படுத்தின. பாம்பேயைத் தோற்கடித்த போரைப்பற்றி சிசெரோவின் பேச்சு இடம் பெற்றபோது சீசர் நடுங்கினான். அவன் கைகள் உதறின. கட்டாயப்படுத்தப்பட்டவன் என்ற நிலைக்கு உள்ளான சீசர் லிகாரியசை விடுதலை செய்தான்.

குடியரசா? முடியரசா?

இலக்கிய அன்பர்க்கு ஷேக்ஸ்பியரின் நாடகத்தின் வழி *சீசர்* அறிமுகமானவன். நண்பனோ எதிரியோ ரோமில் எல்லோருடைய வாழ்வும் தாழ்வும் சீசரைப்பொறுத்தே அமைகின்றன. நாடகத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் ஷேக்ஸ்பியர் சீசருடைய குறைகளைச் சுட்டிக்காட்டுகிறான். செவிடன், மயங்கிவீழ்பவன், தடுமாறும் நெஞ்சினன், ஒரே பார்வையில் பிறரைப்பற்றித் தப்புக்கணக்குப் போடுபவன் என்றெல்லாம் சீசரைப்பற்றி ஷேக்ஸ்பியரின் பாத்திரப் படைப்பு அமைந்தாலும் ஓரிரண்டிடங்களில் அவன் சிறப்பையும் ஷேக்ஸ்பியர் தெரிவிக்கிறான். "குறுகிய உலகில் அவன் (சீசர்) பீடுநடை போடுகிறான். சிறுமைக்குணம் படைத்த நாம் அவனுடைய பருத்த கால்களுக்கிடையில் நடந்து எட்டிப்பார்க்கிறோம்"[3] என்று காஷியஸ் (Cassius) பேசுகிறான், "அரசியல், கயவனின் கடைசிப் புகலிடம்"[4] என்று சாமுவல் ஜான்சன் சொன்னான். பொறாமைத் தீக்கிரையான காஷியஸ் தனிப்பட்ட சீசரின் அரசுத்தலைமை மக்களின்

---

2. "Ciceronian Prose is practically the prose of the human race."

3. "He doth bestride the narrow world
Like a Colossus, and we petty men
Walk under his huge legs and peep about.'
—Shakespeare's *Julius Caesar*.

4. "Politics is the last refuge of a scoundrel."
—Samuel Johnson.

சுதந்திரத்தைக் குலைத்துவிடுமோ என்றஞ்சிய புருட்டஸ் (Brutus) என்ற நல்லவனையும் சீசருக்கெதிர் அணியில் சேர்த்துக்கொண்டான். குடியரசு குலைந்து முடியரசு முகிழ்த்துவிடும் என்ற அச்சத்தை ஊன்றுகோலாக்கிச் சதிகாரர் வலையில் சீசரின் நண்பன் புருட்டசும் சிக்குண்டான். சீசர் வீழ்ந்தபிறகு மக்கள்முன் தன் செயலுக்கு அவன் காரணம் உரைத்தான். "இக்கூட்டத்தில் சீசரின் நெருங்கிய நண்பன் இருப்பின் அவனுக்கு நானென்று சொல்வேன். சீசரின் பால் என் அன்பு அவனுடையதினும் குறைந்ததில்லை. சீசர் உயிருடனிருந்து எல்லோரும் அடிமைகளாயிருப்பீர்களா? அன்றி அவன்மடிந்து சுதந்திரமக்களாய் வாழ்வீர்களா? சீசரின்பால் என் அன்பு குறைந்ததென்பதில்லை; ஆனால் ரோம்மீது என் அன்பு மிகுந்தது.[5] ஆசை அவனைப் பற்றிக்கொண்டதால் நான் கொன்றேன்." மகிழ்ச்சி ஆரவாரம்காட்டி புருட்டசைப் போற்றிய அதே மக்கள் கூட்டம் பின்னர் அந்தோணியின் பேச்சைக் கேட்டுச் சதிகாரர்க் கெதிராகக் கிளர்ந்தெழுந்தது.

சதிகாரர் கூட்டத்தில் கலந்துகொண்ட நண்பன் புருட்டஸ் தாக்கியதும் "நீயுமா புருட்டஸ்" என்று வினவிய சீசர் தன் எதிர்ப்பைக் கைவிட்டான். ஷேக்ஸ்பியர் நாடகத்தில் இடம்பெறும் இந்நிகழ்ச்சிபற்றி ஜார்ஜ் பெர்னார்டு ஷா சொல்வதாவது: "இது உண்மையானால் அவன் (சீசர்) திருத்தப்படமுடியா நாடக நடிகனாய்த் தானிருக்கவேண்டும்."[6]

கி. மு. 44ஆம் ஆண்டில் ஜூலியஸ் சீசர் கொலை செய்யப் பட்டான். சீசர் கொலையுண்டதும் புருட்டஸ் சதிகாரரை ஆதரித்ததும் சரியா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடவில்லையெனினும் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த சீசரின் வாழ்க்கையும் ரோம் அரசியலும் இன்றுவரை மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டவர்களைச் சிந்திக்கத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

பயன்பட்ட நூல்கள்

T. R. GLOVER : The Ancient World—A Beginning. London 1935.

Shakespeare's Julius Caesar.

புறப்பொருள் வெண்பாமாலை.

புறநானூறு.

———

5. "Not that I loved Caesar less, but that I loved Rome more." —Shakespeare's *Julius Caesar*

6. "If this be true, he (Caesar) must have been an incorrigible comedian." —George Bernard Shaw.

தொடை வகை

[திருமங்கலம் புலவர், வை. தங்கமணி]

தொல்காப்பியம்—பொருளதிகாரம்—செய்யுளியலில் தொடை வகை கூறும் நூற்பா :

"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்று
ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே"

(செய்யுளியல்: 96

இந்நூற் பாவிற்கு இளம்பூரணர் 'வடிவுபெற்ற மரபினை உடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது என்றவாறு' என்று மொத்தம் கூறி அதனை விளக்கிக் கூறுமுகத்தான்.

1. மோனைத் தொடை விகற்பம் ஆயிரத் தொருபத் தொன்ப தாம். (1019).

2. எதுகைத் தொடை விகற்பம் இரண்டாயிரத்து நானூற்று எழுபத்து மூன்று. (2473).

3. முரண் தொடை சொன் முரண், பொருண்முரண் என இரண்டாம். (2).

4. இயைபுத் தொடை விகற்பம் நூற்றெண்பத் திரண்டு. (182).

5. அளபெடைத் தொடை விகற்பம் நூற்றைம்பத் தொன்பது (159).

ஆக மொத்தம் மூவாயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து வகையாம். (3835).

6. பொழிப்புத் தொடை வகை விகற்பம் :

i. மோனைப் பொழிப்புத் தொண்ணூற்று மூன்று. (93).

ii. எதுகைப் பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது. (229).

iii. முரண் பொழிப்பு இரண்டு. (2)

iv. இயைபுப் பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு. (182).

v. உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்து எட்டு. (148).

ஆக அறுநூற்று ஐம்பத்து நான்கு (654.)

7. ஒரூஉத் தொடை விகற்பம் பொழிப்புத் தொடை விகற்பம் போல அறுநூற்று ஐம்பத்து நான்கு. (654).

8. செந் தொடை விகற்பம் :

மொழி முதலாகும் எழுத்து தொண்ணூற்று மூன்று (93) மற்றைய அடியினும் ஒத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனை எழுத்துத் தொண்ணூற்று இரண்டொடும் உறழ (93×92 : 8556) எண்ணாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தாறு. இவ் வகையினால் தொடை விகற்பம் பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பதாம். (13699) என்று விளக்கம் தருவார்.

இதற்குப் பேராசிரியர் :

'கேட்டார்க்குத் தொடைப் பாடு வெளிப்படும். இலக்கணத்தவாகிய தொடைக் கூறுபாடு தாமே என்பது பிரித்துக் கூறியவாறு. பதின் மூவாயிரத்தொடு எழுநூற்று எட்டுத் தொடைப் பகுதி பதின் மூவாயிரத்து எழுநூற்று எட்டு என்று சொல்லுப ஆசிரியர் என்பது இதன் பொழிப்பு' என்று மேலும் 'ஐயீராயிரத்து ஆறைஞ்ஞூற்றெடு' என்பது உம்மைத் தொகை - தொண்டு தலையிட்ட' என்பது ஒன்பானை அகப்படும் மொழியாக உடைய வென்றவாறு. அது செய்த வென்னும் பெயரெச்சமாகலின் எழுநூற்றெண்பதென்னும் பெயர் கொண்டு முடியும். எனவே எழுநூற்றெருபத்தெட்டா மென்றஞ்சிப் பத்துக் குறை எழுநூற்றெண்பது என்றுமென்பது எனவே ஆண்டு நின்ற ஒன்பானொடும் தொண்டு தலையிட்ட ஒன்பானையும் கூட்ட எழுநூற்றெட்டாயின வென்றவாறு :

அஃதே கருத்தெனின் :

''பதின் மூவாயிரத் தெழு நூற்றெட் டென
மொழியப் பட்டன தொடை தெரி வகையே''.

என அமையும். என்று தெளிவுபடக் கூறுது. இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரம் செய்த தென்னையெனின் அங்ஙனமே அதனை ஞாபகப் படச் செய்தான் ஆசிரியர் என்பர். மேலும் அவரே—

இனி இக் காலத்துள்ள ஆசிரியர் ஒரு சாரார் :

'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழு நூற்றெண்றும்',

எனப் பாடம் திரிப்பாரும்—

'இன்னொரு சாரார் எழுநூற்றென்றும்',

எனப் பாடம் திரிப்பாரும் உளர்.

ஒரு சாரார் 'ஒன்றும்' என்பது முற்றுவினை என்பர்.

"மெய்பெறு மரபிற் றொடை வகை...
பத்துக் குறை எழுநூறு"

என்னும் எண்ணொடு 'ஒன்றும்' எனக் கூட்டுப. பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது என்பது அவர் கருத்து. 'ஒன்றும்' என்பதனை எண்ணுப் பெயர் முற்றும் மைப் படுத்த தென்பாரும் அதுவே கூறுப. அவர் அறியார். அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்தன்று அல்லதூஉம் :

'ஒன்பஃதென்ப உணர்ந்திசினோரே' என்பது பழம் பாடம் ஆகலானும் அஃது அமையாதென்பது அவ்வாறு கொள்வார்க்குத் தொடை பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றென்ப தாகவும் பிழைக்கும் என மறுக்க; என்னை ? 'அறுநூற்றிருபத்தைந்து அடியினையும் தமக்குப் பொருந்துமாற்றன் இருபத்திரண்டு தொடை யொடும் பெருக்குங்கால் அவர்க்கும் ஓரடிக் கண்ணே தொடை கோடல் வேண்டுமாகலானும் அங்ஙனம் கொள்ள இரட்டைத் தொடை முதலாயின அறுநூற்றிருபத்தைந்தாகாமையானும் என்பது' என்று கூறி இவர்க்கு முன்னோர் கூறிய உரைகளை எல்லாம் மறுப்ப தோடு—உரையாசிரியர் இளம்பூரணர் உரையையும் மறுத்துத் தொடையும் தொடை விகற்பமும் பதின் மூவாயிரத்து எழுநூற்று எட்டு என்று கூறுவர்.

இனி உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் கூற்றினைப் பார்ப்போம் :

'கேட்டார்க்குத் தொடைப் பாடு வெளிப்படுக்கும் இலக்கணத்த வாகிய தொடைக் கூறுபாடுதாம் பதின் மூவாயிரத்தோடே ஒன்பது தலையிலே வைத்த பத்துக் குறைந்த எழுநூற்று ஒன்பது என்று கூறுவர் என்பது ஆறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்று என்று கூறுவர் கட்டளை அடியின் தொடைப் பகுதி அறிந்தோர்.

பதின் மூவாயிரத்தோடே ஆறாயிரத்திருநூற்றுத் தொண்ணூற் றொன்றெனவே தொகை பத்தொன்பதினாயிரத்து இருநூற்று ஒன்றாயிற்று.

அதாவது ஐந்து ஈராயிரமாகிய பத்தாயிரத்தொடு ஆறு ஐஞ்ஞூற்றினைப் பெருக்கவரும் . மூவாயிரத்தினைக் கூட்டக்கூடும் பதின்மூவாயிரமாம்.

தலையிலே ஒன்பது வைத்த பத்துக் குறைந்த எழுநூற்றை அதாவது அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பதை ஒன்பதால் பெருக்கவரும் ஆறுயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்றினை முன்னர் உள்ள பதின் மூவாயிரத்தொடு கூட்டக் கூடும் பத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்று என்பர்.

ஆக: 1. இளம்பூரணர் பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது (13699) என்றும்,

2. பேராசிரியர் பதின் மூவாயிரத்து எழுநூற்று எட்டு (13708) என்றும்,

3. நச்சினார்க்கினியர் பத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்று (19291) என்றும், கூறுவார்கள்.

இதில் யார் கூறுவது பொருந்துவதாக உள்ளது. நச்சர் தமது உரை இறுதியில் 'பலரும் பலவாறு கூறுவர் இவற்றுள் நல்லது உய்த்துணர்ந்து கொள்க' என்றும் கூறுவார்.

எனின் நிலையான முடிபு இல்லை. தத்தமக்கு ஏற்றவாறு எண்ணிக்கை கூறுதல் போல் படுகிறது. அன்றோ? என்றால் ஏற்புடைத்தான உரை யாருடையது? அதனை எவ்வாறு காண்பது?

இளம்பூரணர், பேராசிரியர், நச்சர் ஆகிய மூவர் உரையிலும் உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரை எவ்வாற்றானும் பொருந்துவது போலப் படவில்லை. ஆகையால் அவருரையை விட்டு விடுதலே நலம்.

ஏனைய இருவர் உரையிலும் யாவர் உரை பொருந்துவது? இவர்களுக்கு வேறு யாராவது துணை நிற்கிறார்களா? என்று பார்க்க வேண்டியது உள்ளது.

தொல்காப்பியர்:

''மோனை எதுகை முரணே இயைபென
நான்நெறி மரபின தொடைவகை என்ப'' —394

''அளபெடை தலைப்பெய ஐந்து மாகும்'' —394

''பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்
அமைந்தவை தெரியின் அமையு மாருளவே'' —395

''நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப''. —396

இவ்வாறு தொடை பத்து என்று கூறுவார். அவைகளுக்கு விளக்கம் கூறுமிடத்து, நிலை நிறுத்தியற்றுதல், இரட்டை யாப்பு

இரண்டினுக்கும் விளக்கம் கூருது விட்டுவிடுகிருர். ஏன் அவ்வாறு விட்டுவிட வேண்டும் என்ருல் நிரல் நிறுத்தியற்றலும், இரட்டை யாப்பும் முன் கூறியவற்றுள் அடங்கும் என்பதால்—விட்டுவிட்டோம் என்பார்.

சங்க யாப்புடையாரும், பல்காயனுரும் காப்பியர் கூறும் நிரல் நிறுத்தியற்றுதல் கூறி முன்னதில் அடங்கும் என்பதனை விடுத்து ஒன்பது எனக் கொள்கின்றனர்.

எவ்வாருயினும் தொல்காப்பியர் இன்னவாறு வரும்—அதனை இவ்வாறு கூட்ட வேண்டும்—அல்லது பெருக்க வேண்டும் என்றெல் லாம் குழப்பத்தில் ஆழ்த்தும் முறையில் கூறிவிடாது மொத்தமாகவே தொடையைக் கூறுகிருர். எவ்வாறு?

> "மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
> ஐயீ ராயிரத்து ஆறு ஐஞ் ஞூற்ருெடு
> தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
> ஒன்பஃ தென்ப உணர்ந்திசி ஞேரே" —செய் : 406

இதில் 'தொண்டு' என்ற சொல்லை ஒன்பது எனக் கொண்டு பேராசிரியர் தொடை வகை பதின் மூவாயிரத்து எழுநூற்று எட்டு என்பர்.

ஆனுல் இளம்பூரணர் 'தொண்டு' என்ற சொல்லை ஒன்பது எனக் கொள்கிருர். ஒன்பது என்பதனை ஒன்பதாகக் கொள்ளாது 'ஒன்றுதல்' எனப் பாடபேதம் கொண்டு தொடைவகை பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது எனக் கூறுவார்.

இருவரிலும் இளம்பூரணருக்குச் சங்க யாப்புடையாரும், யாப் பருங்கல விருத்திப் பழைய உரையாசிரியரும் துணை நிற்றலைக் காணலாம். பேராசிரியர் கொண்ட எண்ணிக்கைக்கு யாரும் துணை நிற்பதாகத் தெரியவில்லை.

சங்க யாப்புடையார் :

> "முந்திய மோனை எதுகை அளபெடை
> அந்தமில் முரணே செந்தொடை இயைபே
> பொழிப்பே ஒரூஉவே இரட்டை என்னும்
> இயற்படு தொடைகள் இவைமுத லாகப்
> பதின்மூ வாயிரத்து அறுநூறு அன்றியும்
> தொண்ணூற் ருென்பதென் றெண்ணினர் புலவர்"
>
> —யா. வி. பக் : 184

சங்க யாப்புடையாரும் தொல்காப்பியர்போல ''இவை முதலாகப் பதின் மூவாயிரத்து அறுநூற்றன்றியும் தொண்ணூற்றென்பதென் றெண்ணினர்'' என்று கூறிச் செல்கிறார்.

யாப்பருங்கல விருத்தி—பழைய உரையாசிரியர் அதற்கு விளக்கம் தருவதுபோல் ''நான்கு பாவும் பெற்ற ஐம்பத்தொரு நிலத் தனவாகி விரிந்த அறுநூற்றிருபத்தைந்து அடியும், அவற்றுள் ஓரோ வடியும் இருபத்திரண்டு தொடையும் பெறப் பதின் மூவா யிரத்து எழுநூற்று ஐம்பதாய் வரும். அவற்றுள் ஐம்பத்தொரு நிலமும் களையப் பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது தொடையாம். அடியிரண்டு இயைந்த வழி தொடையாம் என்ப வாகலின் ஐம்பத்தொரு நிலமும் களையப்பட்டன'' என்பர்.

இதற்கு மேலும் விளக்கம் தருவது போல்:

''வெள்ளை நிலம்பத் தகவல் பதினேழு
துள்ளல் இருநான்கு தூங்கல்பத்து—எள்ளா
இருசீர் அடிமுச்சீர் ஐந்தாறே ழெண்சீர்
ஒருவா நிலமைம்பத் தொன்று''. —யா. வி. பக்: 187

வெண் பாவிற்கு நிலம்: பத்து.

அகவலுக்கு நிலம்: எட்டு.

வஞ்சிப் பாவிற்கு நிலம்: பத்து.

இருசீர், முச்சீர், ஐந்துசீர்,

அறுசீர், எழுசீர், எண்சீர்,

ஆகிய ஆறுசீர்களுக்கும் ஒவ்வொரு

நிலமாகக் கொண்டு:

ஆக நிலம்: ஆறு.

மொத்தம்: ஐம்பத்தொன்று என்பர்.

அகவலுக்கு இருநூற்று அறுபத்தொன்று, வெண்பாவிற்கு இருநூற்று முப்பத்திரண்டு, கலிப்பாவிற்கு நூற்று முப்பத்திரண்டு என்று......

''இருநூற்று இருமுப்பத் தொன்றகவல் ஏனை
இருநூற்றேடு எண்நான்கு வெள்ளைக்—கொருநூற்று
முப்பத் திரண்டாம் முரற்கைக் கிவையறுநூற்
றற்றமில் ஐயைந் தடி'' —யா. வி. பக்: 185

என்று அடிகள் அறுநூற்றிருபத்தைந்து என்பர்.

''அசைச்சீர், இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர், வஞ்சி உரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ்வைந்துசீரும் வருஞ்சீராக உறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். இவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்துசீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாம். அந் நூற்றிருபத்தைந்தின்கண்ணும் நான்காவது ஐந்து சீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம். என்றவாறு'' என்று இளம்பூரணர் கூறுவார். தொல். பொருள். இளம். பக்: 440.

''அகவற்கு—ஆசிரியத்தளையும், வெள்ளைக்கு இயற்சீர் வெண்டளையும், துள்ளற்குக—கலித்தளையும் ஆக அறு நூற்றிருபத்தைந்து தளையும் மூன்று பாவிற்கும் பகுக்குங்கால் அகவற்கு முந்நூற்று இருபத்துநான்கும், வெள்ளைக்கு நூற்று எண்பத்து ஒன்றும், கலிக்கு நூற்றிருபதும்'' என்று நச்சர் கூறுவார். தொல். பொருள். நச்: பக்: 47.

வரும் வழிகள் வெவ்வேறு என்றாலும் சென்றடையும் இடம் ஓரிடமே என்பதுபோல இளம்பூரணரும், நச்சரும் வெவ்வேறு முறையாகக் கூறினாலும் பாவிற்கு அடிகள் கூறுமிடத்து ஒன்றாகி விடுகின்றனர்.

''மோனை இரண்டாம்; எதுகையோர் எட்டாகும்;
ஏனைமுரண் ஐந்து; இயைபு ஒன்றும்—ஏனைப்
பொழிப்பாதி ஐந்தும் குறிப்புத் தொடையோடு
இழுக்கா இருபத் திரண்டு''   —யா. வி. பக்: 185

மோனைத் தொடையிரண்டு, எதுகைத்தொடை எட்டு, முரண்தொடை ஐந்து, இயைபுத்தொடை ஒன்று, பொழிப்புத்தொடை ஐந்து, குறிப்புத் தொடை ஒன்றுஆக இருபத்திரண்டு கூறுவார் யாப்பருங்கலப் பழைய உரையாசிரியர்.

இதனை:

''ஆறிரண்டோ டைந்தடியை ஐந்நான் கிருதொடையான்
மாறிநிலம் ஐம்பத்தொன் றகற்றித்—தேறும்
ஒருபதின் மூவாயிரத் தோடொன்று ஊனமாகி
வருமெழு நூறு என்னும் வகை''   —யா. வி. பக்: 185

அறுநூற்றிருபத்தைந்தடியை இருபத்திரண்டு தொடையால் பெருக்கவரும் பதின்மூவாயிரதது எழுநூற்று ஐம்பதை—ஐம்பத்தொரு நிலமும் கழிக்க பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது என்பர்.

பாடபேதமின்றி உரைகண்ட பேராசிரியர்க்கு யாரும் இணை நின்றதாகத் தெரியவில்லை.

ஆனால் பாடபேதம் கொண்டு உரைகண்ட இளம்பூரணருக்குச் சங்க யாப்புடையாரும், யாப்பருங்கல விருத்தி பழைய உரையாசிரியரும் துணை நிற்கக் காண்கிறோம்.

அதிகப்படியானவர்களின் ஆதரவு பெற்றவரும், 'ஒன்பது' என்பதல்ல 'ஒன்றுதல்' எனப் பாடபேதம் கொண்டவருமான இளம்பூரணர் உரைதான் இந் நூற்பாவிற்குப் பொருத்தமுடையது என்று நாம் ஏற்றுக்கொள்வோமேயானால்—அவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ளுமுன் பாடபேதம் ஒன்பதில் இருக்கவேண்டுமா! அன்றி 'தொண்டில்' இருக்கவேண்டுமா ? என்பதனைச் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டியதிருக்கிறது.

தொல்காப்பியர் தொடைவகை கூறும் நூற்பா நான்கு அடிகளைக் கொண்டது. மூன்றாவது அடியின் முதலில் 'தொண்டு' என்ற சொல்லும் நான்காவது அடியின் முதலில் 'ஒன்பது' என்ற சொல்லும் புகுத்திக் காட்டுகிறார்.

இதுபோன்று பரிபாடல் மூன்றாவது திருமாலை வாழ்த்தும் கடுவன் இளவெயினனார் பாட்டில் முப்பத்தொன்பதாம் அடியில் 'ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள' என்று 'ஒன்பது' என்பவர் எழுபத்தொன்பதாம் அடியில் 'தொண்டு' எனச் சுட்டுவார்.

காப்பியர் இடைவெளி இன்றி நெருக்கமாகவே கூறுவார். ஆனால் பரிபாடல் ஆசிரியர் இடைவெளி அதிகமாகவே விட்டுச் சொல்வார். இவ்வாறு ஒரே நூற்பாவிலும், பாடலிலும் ஓர் எண்ணைச்சுட்டும் வெவ்வேறு சொல்லை வெவ்வேறு இடத்தில் ஏன் பயன் படுத்துதல் வேண்டும்.

ஒருகால் 'ஒன்பது' ஒப்பானது அல்ல—'தொண்டு'தான் இருக்கவேண்டும்—நல்லதும்—பொருத்தமானதும் ஆகும் என எண்ணி 'ஒன்பது' வீட்சிக்குத் தொண்டினை ஆட்சிக்குக் கொண்டு வந்தார்களா? என்றால் 'ஒன்பது' தனக்கு ஒப்பில்லை என்று 'ஒன்பதாக'வே நிற்க—'தொண்டு' ஏன் ஆட்சி பெறவில்லை?

'சைக்கிள்' என்ற சொல்லுக்குத் தற்போது 'ஈருருளி' என்றும் 'மிதிவண்டி' என்றும் மொழிபெயர்த்தனர். ஆனால் 'ஈருருளி' உருண்டோட—'மிதிவண்டி' நம் காலடியில் நிற்பதைக் காணலாம். இதுபோன்று மக்கள் மத்தியில் 'தொண்டு' தொண்டு செய்யாது போக, 'ஒன்பது' மட்டும் ஒட்டிக்கொண்டதா ?

(தொடரும்)

கங்கை தங்கிய சடையர்

[தி இராசமாணிக்கம், பி. ஏ., பி. காம்., பொள்ளாச்சி]

சிவபெருமானது பல்வேறு திருவுருவங்கள் ஆகமங்களில் பேசப்படுகின்றன ; திருக்கோயில்களில் புடை சிற்பங்களாக உருவாக்கப்பட்டுள்ளன ; சிலை வடிவங்களாக அமைக்கப்பட்டுள்ளன ; ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்று அலைபுனற் கங்கையை அண்ணல் தன் கற்றைவார் சடையில் ஏற்றது.

வானோர்களுக்கும் கனவிலும் அரியனான அம்மையப்பன் தன்னைப் புகல் அடைந்த அடியார்களுக்கு நனவிலும் எளியன் என்பது ஆன்றோர் வாக்கு. தன் முன்னோர்கள் நற்பேறு பெற, பகீரதன் பரமனை நோக்கித் தவம் புரிகின்றான். வெஞ்சின முகங்களாகி விண்ணினின்று விசையொடு பாய்ந்த கங்கையை பகீரதனுக்காக மங்கை பங்கன் தன் தாழ்சடையில் ஏற்றுச் சிறிதளவு கீழே விட்டான். இங்ஙனம் இறைவன் அருளியதை,

"பண்டுபகீரதன் வேண்ட.
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை நங்கையாளை
நின் சடை மிசைக்கரந்த
தீர்த்தனே" (7)

என, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருப்புன்கூர்த் திருப்பதிகத்தில் போற்றி இசைக்கிறார். கங்கை என்னும் தையல் "ஆயிர முகமதாகி வையகம் நெளியப் பாய்வான் வந்திழி"ந்தாள். எனவே உலகை அழிவினின்றும் காப்பாற்ற கந்தம் கமழ் கொன்றைச் சடையான் கங்கை நல்லாளைத் தன் மின்னொளிர் சடையில் தாங்கினான். இதனை மணிவாசகப் பெருமான்,

"சலமுகத்தால் அவன் சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம்" (திருச்சாழல்—7)

என்று அருளியுள்ளார்.

மனித வாழ்வின் வளத்திற்கு மழை வேண்டற்பாலது. வள்ளுவப் பெருந்தகையார் தமது திருக்குறளில் கடவுளை வாழ்த்திய பின், மழை பொய்ப்பின் உலகில் பசும் புல்லும் காண இயலாது ; வானோர்க்கும் பூசனை நடைபெறாது ; தவமும் கொடையும் இல்லை ; மழைதான் மனித வாழ்விற்கு அமிழ்தம் எனப் பலவாறாக வான் சிறப்பை விதந்து போற்றுகிறார். இதன் பெருமையினைச் சங்க

இலக்கியங்களான புறநானூறு, பதிற்றுப்பத்து போன்றவற்றில் நல்லிசைப் புலவர் பெருமக்கள் வலியுறுத்தியுள்ளதைப் பரக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக,

''பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே'' (புறம். 107)

என வேள் பாரியைப் பற்றிக் கபிலரும்,

''மாரியன்ன வண்மையிற் சொரிந்து'' (புறம். 387)

எனச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனை எருக் காட்டூர்த் தாயங் கண்ணனாரும் பாடியுள்ளவற்றைக் குறிப்பிடலாம். வாழ்வின் வளத்திற்கு மட்டுமன்றி உயிர் வாழவும் இன்றியமையா நீரை உடைமையால் ஆற்றினை அன்னையாக நம் முன்னோர் போற்றி வழிபட்டனர். எடுத்துக்காட்டாக, காவேரியைக் காவேரி அன்னை என அன்புடன் அழைத்து இன்றும் பூசை பலி புரியப்பட்டு வருகின்றன. ஆறுகளில் கங்கை புனிதம் மிக்கது எனக் கருதப்படுகிறது. அதுபற்றியே நீரைப் பொதுவாக, அதன் தூய்மையை, மாண்பினை, புனிதத் தன்மையினை உணர்த்த, கங்கை என்பது மரபு. மனித வாழ்க்கைக்கு வேண்டப்பட்ட நீரை அதிலும் கங்கையைத் தன் குழற் சடையில் சிவபெருமான் அணிந்துள்ளதினின்றும் அவன் உயிர்கள்மாட்டு ''பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரி''வுடையோன் என்பது தெளிவாகிறது. ''ஆறு செஞ்சடைமேல் வைத்த வங்கணர்'' எனச் சேக்கிழார் பெருமான தமது திருத்தொண்டர் புராணத்தில் அண்ணல் ஆறு அணிந்தது அவனது தண்ணளியை, அருள் திறத்தைக் காட்டுகிறது என்ற குறிப்புப் பெற வெகு அழகாகக் கூறியுள்ளார்.

இறைவனது திருமுடி வானமாகவும், செம்பொன் நேர் சடையை வானில பரந்து இலங்கு முகிற் றொகுதியாகவும், கற்றைச் சடையில் உள்ள கங்கையை முகிற் படலத்தில் தோன்றும் நீராவியாகவும் பொருள் கூறுவர். இது உலகினை இறைவன புரக்கும் அருட் பண்பைத்தான் வலியுறுத்துகிறது.

மந்திரத்தை ஆசான் மூலமாக அன்றி நூல் வாயிலாக உணர வைக்க நேரின், கூட்டியும் குறைத்தும் வைக்கும் மரபினைப் பின்பற்றி, வகரத்தை வகர ஆகாரமாகக் கூட்டியும், 'யா' என்பதனை யகரமாகக் குறைத்தும், 'சிவாயநம' என்னும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து வழங்கி வருகிறது. இது சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு மற்றும்

மறைப்பு என்னும் ஐம்பொருளைக் குறிக்கும். இதில் நடுவில் உள்ள "யாப்பு" ஆவியின் அடையாளம் எனப்படுகிறது. யகரத்தின் இரு மருங்கிலும் உள்ள வகரம் வனப்பாற்றலையும், நகரம் நடப்பாற்றலையும் குறிக்கின்றன. வனப்பாற்றல் என்றாலும் திருவருள் என்றாலும் ஒன்றே. அது தன் நிலையினின்றும் திரியாக்காரணத்தால் மலைமகள் எனப்படும். அதுவே பராசக்தி என்றும் அழைக்கப்பெறும். நடப்பாற்றல் என்பது திரோதான சக்தி, அது மாறும் இயல்பினைக் கொண்டது. இது ஆதி சக்தி என்றும் அழைக்கப்பெறும். வனப்பாற்றலை மலைமகள் என்றால், நடப்பாற்றலைச் சலமகள் என்பர். சலம் என்றால் வஞ்சனை, மறைப்பு என்று பொருள். இது நல்வினை, தீவினை எனப்படும். இருவினை துய்ப்பவரை, சிவமாம் மெய்ப் பொருள் காட்டாது, உலகினைக்காட்டி, உழலச் செய்யும். அது உயிரின் செவ்வியறிந்து, ஆணவ இருளை அகற்றி, உலக இயல்பின் உண்மைநிலையினை உணர்த்தி, சிவத்தைத் தெளிவுறக் காட்டி, திருவடியின்பத்தை நுகர்விக்கச் செய்கிறது. இவ்வாறு நடப்பாற்றல் உயிர் பரிபக்குவ நிலையை அடையுங்காறும் அதை வஞ்சித்து உலகுடன் இயங்கச் செய்து, உரிய காலத்து மெய்ப்பொருளாம் சிவத்தைத் தெளிவாகக் காட்டுதலால், சலமகள் எனப்படுகிறது.

"சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார்" (2)

என அப்பர் பெருமான் தமது திருவாலங்காடு திருத்தாண்டகத்திலும்,

"சலமகள் உலவிய சடையினர்" (திருவிடை மருதூர்-7)

"சலமகளோ டெருக்கும் முடிமே லணிந்து"
(கோளறு திருப்பதிகம்-9)

எனச் சம்பந்தப் பெருமானும் அருளியுள்ளவை இங்குக் குறிப்பிடத் தக்கனவாம். இங்ஙனம் "ஆறலைத்த சடையான்" என்பதற்குத் தத்துவரீதியாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

இவ்வாறாக இறைவன் உயிர்களை இம்மையில் காப்பதோடு அமையாது, அவற்றின் செவ்வியறிந்து நன்னெறியில் உய்த்துத் தன் திருவடியின்பத்தை நல்குகிறான் என்பதை இத் திருவுரு உணர்த்து கிறது என்பதைத் தெள்ளிதின் அறியலாம்.

பண்டைக்காலந் தொட்டு தமிழகத்தில் கோயில்கள் இருந்தமைக்கு இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. இருப்பினும் இன்றைய கோயில்களின் வளர்ச்சி குடைவரைக் கோயில்களினின்றுதான் காண இயலுகிறது. தமிழகத்தில் குடைவரைக் கோயில்களைத் தோற்றுவித்தவன் கி. பி. 600 முதல் 630 வரை செங்கோலோச்சிய பல்லவப் பேரரசன், முதல் மகேந்திரவர்மன்,

தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும் உள்ள அவனுடைய குடைவரைக் கோயில்கள் பலவற்றில் திருச்சியில் உள்ள ''லலிதாங் குரப் பல்லவக் கிருகம்'' என்ற குடைவரையில் மட்டும் புடை சிற்பம் உள்ளது. அது ஆறு கொப்பளித்த சென்னியனது. நதிசூடிய நம்பனின் நான்கு கைகளில் பின்வலக் கை சடைமுடி ஒன்றினைப் பிடித்த நிலையில் உள்ளது. அதை அடுத்து, கங்கை மார்பில் கூப்பிய கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளாள். அவனது வலக் கால் அசுரன் ஒருவன் தலைமீது வைக்கப்பட்டுள்ளது. பகீரதனும், முனிவரும், வானவர்களும் இருமருங்கும் காணப்படுகின்றனர். இங்கு அன்னை இல்லை. ஆடவல்லான் காலடியில் இருப்பதுபோன்று அசுரன் ஒருவன் இங்குள்ள வடிவின் காலடியில் உருவாக்கப் பட்டுள்ளான். ''நடராசரும் கலையும் கலாசாரமும்'' என்ற தமது நூலில் திரு. சி. சிவராமமூர்த்தி ''ஆலம்பூர் என்ற இடத்தில் உள்ள கோயில் ஒன்றில் பெருக்காறு சடைக் கணிந்த பெம்மானின் வலக் காலடியில் அசுரன் ஒருவன் உள்ளான்'' என்று கூறுகிறார். மேலும் இறைவன் கங்கையைத் தன் சடையில் ஏற்றமையால் அவளது செருக்கை அடக்கியமைக்காக ஆடுவதாகக் கருத்துத் தெரி வித்துள்ளார். கங்கையின் செருக்கை அடக்கியது, திருக்கூத்து புரிதல் ஆகிய இரண்டும் கலந்துள்ளன. இந்த இரு இயல்புகளையும் இங்குள்ள வடிவமும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆலம்பூரில் உள்ளது சாளுக்கியர் பாணியில் அமைந்ததாகவும், அது எட்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது எனவும் அவர் தமது நூலில் குறிப்பிட் டுள்ளார். திருச்சியில் உள்ள வடிவம் ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்ததால், இதைப் பின்பற்றி ஆலம்பூரில் உள்ள வடிவம் அமைக்கப் பட்டதா என்பது ஆராய வேண்டிய ஒன்றாகும்.

புதுக்கோட்டை நகரத்தின் ஒரு பகுதியான திருக் கோகர்ணத் தில் உள்ள குடைவரைக் கோயிலில் ஆறு சேர் சடைக் குடையப்ப னின் வடிவம் புடை சிற்பமாகக் காணப்படுகிறது. இந்த வடிவத் தின் சடையில் கங்கை உருவாக்கப்பட்டுள்ளாள். திருச்சியைப் போன்று இங்கும் அன்னை அமைக்கப்படவில்லை. ஆனால் அங்குள்ள தைப் போன்று இறைவனின் காலடியில் அசுரனும், இருமருங்கும் பகீரதன் ஆகியோரும் உருவாக்கப்படவில்லை. அன்னையின்றிச் செதுக்கப்பெற்ற இவ்விரு புடை சிற்பங்கள் இத்தகு வடிவங்களில் காலத்தால் தொன்மையானவையாகக் கொள்ளப்படுகின்றன.

சிவன் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களில் உள்ள புரை களில் நான்முகன், திருமால், மற்றும் சிவனது பல வடிவங்கள் குறிப்பாக இலிங்கோற்பவர், ஆணோடு பெண்ணாகிய பெம்மான், ஆலமர் செல்வன் போன்ற வடிவங்கள் அமைக்கப்பட்டன. ஆறு

தாங்கிய சடையானின் வடிவம் ஒரு சில கோயில்களில்தான் உள்ளது. எடுத்துக்காட்டாக கொடும்பாளூர், திருமீயச்சூர், மாயூரம், விருத்தாசலம், திருவாலீசுவரம் போன்றவற்றைக் கூறலாம். ஆகம விதிகளின்படி ஆறணிந்த சடா மகுடத்து அழகன் சடையில் கங்கையை உருவாக்க வேண்டும். தனக்குப் போட்டி ஏற்பட்டு விட்டது என்று அன்னை ஊட, அவளது ஊடலைத் தீர்க்க அண்ணல் அவளைத் தன் முன்இடக்கையால் அணைத்து, முன்வலக்கையால் அவளது தாடையைத் தொடுவது போன்று காட்ட வேண்டும். அன்னை தன் மனக்கிளர்ச்சியை அடக்க இயலாது, பதட்ட நிலையில் இருக்க வேண்டும். பிற்காலக் கோயில்களில் இந்த விதிகள் பொதுவாகப் பின்பற்றப்பட்டுள்ளன. குடைவரைக் கோயில்களில் உள்ள வடிவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இந்த வடிவம் அடைந்துள்ள பல மாறுதல்கள் தெரியவரும்.

7 மற்றும் 8ஆம் நூற்றுண்டுகளில் உருவாக்கப்பெற்ற திருச்சி, திருக்கோகர்ணம் குடைவரைக் கோயில்களில் அன்னை உருவாக்கப் படவில்லை, பிற்காலத்தைச் சார்ந்த திருவாலீசுவரம் போன்ற கற்றளிகளில் இந்த வடிவின் முழு வளர்ச்சி காணப்பெறுகிறது. இத்தகைய வளர்ச்சி அடையக் காரணம் என்னை !

"கொடியிடை முனிவுற நனிவருங் குலவுகங்கை" (4)

எனச் சம்பந்தப் பெருமான் தமது திரு அம்பர் மாகாளத் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமது திருஆமாத்தூர்த் திருப் பதிகத்தில்,

"மங்கை வாணுதல் மாண் மனத்திடை
வாடியூட மணங்கமழ் சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவ தென்னை கொலாம்" (7)

என்று வினவுகிறார். கங்கையைப் பின்னுவார் சடையில் பிஞ்ஞகன் ஏற்றமையால் அன்னை கலக்கமும் கோபமும் அடைகிருள். அதன் காரணமாகத் தன் கணவனுடன் ஊடுகிருள் எனப் பெறப்படுகிறது. கங்கையைக் காளகண்டன் தன் சடையில் ஏற்றதுதான் அன்னையின் ஊடலுக்குக் காரணமா அல்லது வேறு ஏதாவது உண்டா எனில், அதற்குத் தாண்டக வேந்தர் தக்க பதில் தமது திருப்பூந்துருத்தித் திருப்பதிகத்தில் அளிக்கிருர்.

"காதலாற்கரந் தான்சடைக் கங்கையை" (3)

ஏற்கெனவே தன் உடம்பில் ஒரு கூற்றை ஒருத்திக்கு அளித்து, மற்றொருத்தியைத் தன் சடையில் வைத்தால், அவ்வாறு சடையில் வைத்தமைக்குக் காதல் காரணமாகவும் அமைந்துவிட்டால்,

ஏற்கெனவே உள்ள ஒருத்தி தன் கணவனுடன் ஊடுவது இயற்கையே அண்ணல் தன்னுடன் ஊடினுளின் ஊடலைத் தீர்க்க முயன்ருன் என அப்பர்அடிகள் தமது திரு அதிகை வீரட்டானத் திருப்பதிகத்தில் நகைச்சுவை மிளிர அருளுகிருர்.

"சூடினுன் கங்கை யாளைச்சூடிய துழனி கேட்டாங்கு
ஊடினுள் நங்கையாளும் ஊடலை யொழிக்க வேண்டி
பாடினுர் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினுர் கெடிலவேலி அதிகை வீரட்டனுரே" (2)

சம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் மகேந்திரவர்மனின் சமகாலத்தவர்கள். அவன் காலத்திய புடைசிற்பங்களில் இவ் வளர்ச்சி இல்லை. பிற்காலத்திய வடிவங்களில் இந்த வளர்ச்சி காணப்படுகிறது. எனவே திருவருட்செல்வர்களின் திருவாக்குகள் இந்தத் திருவுருவை அமைப்பதில் ஏற்பட்ட வளர்ச்சி காரணம் எனக் கொள்ளத் தோன்றுகிறது.

திருவருட்செல்வர்களும், செந்நாப்புலவர்களும் தொன்று தொட்டு சிவன் கங்கையைத் தன் தலையில் அணிந்துள்ளதாகத்தான் கூறியுள்ளார். ஆனல் இதற்கு முற்றிலும் மாறுபட்ட திருவுரு சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் கைலாயநாதர் கோயிலில் உள்ளது. அங்கு இறைவன் கங்கையைத் தன் தலையில் அணியாது. தன் பின்வலக்கையில் கத்திரி முத்திரையில் ஏந்தியுள்ளான். இது ஓர் அரிய படைப்பாகும்.

இறைவனுடைய திருவுருவங்கள் காலம் செல்லச் செல்ல, பல் வேறு வளர்ச்சி அடைந்துள்ளமைக்கு இந்த வடிவம் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

ஒரே வழி!

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

கருங்கற்கள் காலமெலாம் கிணற்று நீரில்
கிடந்தாலும் கடுகளவும் கரைவ தில்லை;
வருங்காலக் குமுகாயம் திருந்து தற்கு
வாயுரையால் பயனேதும் இல்லை; வயதினிலே
சிறுவர்களும் பின்பற்றித் திருந்து மாறு
செயல்முறையில் தனிவாழ்வைப் பேச்சைப் பண்பை
அறிஞர்களும் தலைவர்களும் தூய்மை யாக்கி
அணுவளவும் பிறழாமல் வாழ்ந்தால் போதும்!

அறிவூட்டும் புதினம்

[தி. நா. அறிவுஒளி., க. மு., கல். இ.]

(முன் இதழ் உசசஆம் பக்கத் தொடர்ச்சி)

கதைகள் எழுதத் தொடங்கிய காலத்தில் கதையாசிரியர்கள் கற்பனையைக் கவர்ந்தவர் 'கள்வர்'களே எனலாம். கோகிலாம்பாள் கடிதத்திலும் பம்பாய் மாநிலமலைப் பகுதியில் வாழும் கள்வரும், அன்னார் தலைவன் குமாரசாமியும் படைக்கப்பட்டுள்ளனர்.

ஆங்கில இலக்கியத்தில் இராபின் உடு (Robin Hood) என்னும் 'நல்ல' கொள்ளையனின் தாக்கத்தினால் தமிழகக் கதைகளிலும் 'நல்ல கள்வர்' உருவாயினர்போலும்! இக் கதையில்வரும் கள்ளன் ஏழையர்க்கு உதவும் இரக்க நெஞ்சுடையவன் ஆவான்.

''வியாபாரம், உத்தியோகம் முதலான தொழில்களைச் செய்து பணஞ் சம்பாதிக்கிறவர்கள்போல் வெளிக்குக்காட்டி, ஏழை எளியவர்களின் பொருளைப் பகற்கொள்ளையிட்டுப் பணஞ் சேர்த்து வைத்துக்கொண்டு இரக்கமின்றிச் சுகமாய்க் காலங்கழிக்கும் பிரபுக்கள் வீடுகளில் நுழைந்து இரவிற் கொள்ளையிடுவதுதான் அவனுக்கும் வழக்கம்''. (ப: 220)

கொடியவழியில் பொருள்சேர்த்த பணக்காரரையே இக் கள்வர் கோன் கொள்ளையடிப்பானும்!

நாட்டில் சுரண்டும் முதலாளியினத்தின்மீது அடிகளார்க்கு எழுந்த சீற்றத்தின் விளைவாகவே இக் கதையுறுப்பினன் படைக்கப் பட்டிருக்கிறன்.

நாட்டிலுள்ள ஏழ்மை, வறுமைகளை ஒழிக்க அறிவியலாராய்ச்சி நெறியை ஏற்கமுடியாத காலத்தில் ஆபுத்திரன் கை அமுத சுரபியைத் தண்டமிழாசான் சாத்தனர் கற்பனை செய்தார். மறைமலையடிகளார் 'கள்வர் தலைவனை'ப் படைத்தார். குமுகாயக் கொடுமைகளை எதிர்க்கப் புரட்சிப்படைப்பை உருவாக்க வேண்டியது அறிஞர்க்குக் கடமையல்லவா!

வாணிகம் பகற்கொள்ளையாக நிகழ்வதை அரசு தடுக்காத காலத்தில் புலவர் தம் நேர்மை சான்ற எழுத்தில் கண்டிக்க இம் முறை தக்கதுதான். அரசியல் தொடர்பற்ற தூய இலக்கிய வாணரான அடிகளார் சமயத்துறையில் அழுந்திய பற்றுடையவர்.

ஆயினும் குமுகாயக் கொடுமைகளைப் பகுத்தறிவாளராகச் சாடுகிறார்.

அடிகளின் மும்மொழிப் புலமையாற்றல் இக் கதையிலும் ஒளிர்கிறது. கோகிலாவின் வடமொழியறிவே உயரினத்தினரின் இழிவை எதிர்க்கிறது!

வடலூர் அடிகளாருக்கு நேர் பிறங்கடையினராக மறைமலை யடிகளார் சாதிமுறையை எதிர்க்கின்றார். கதையே சாதியொழிப் புக்கும், கலப்புமணத்தை வற்புறுத்துவதற்கும் எழுதப்பட்டதாகும்.

கதை நிகழ்ச்சிவழியாக மட்டுமின்றி, பேச்சுவழியாக,

''உயர்ந்த அன்புக்குமுன் சாதிக்கட்டுப்பாடு சமயக்கட்டுப்பாடு குடும்பக்கட்டுப்பாடு முதலான எவையும் எதிர் நிற்கமாட்டா. அப்படிப்பட்ட உயர்ந்த அன்பின் வசப்பட்டவர்களை சுயகாரியம் பார்ப்பவர்களென்று சொல்லவேகூடாது.'' (ப: 76)

இக் கொள்கையைப் பல இடங்களிலும் ஆசிரியர் வற்புறுத்து கிறார்.

மக்களுக்குப் பண்பாட்டொழுக்கத்தை யுண்டாக்கி ஒற்றுமையை வற்புறுத்தும் 'உறவுப் பேரிலக்கியம்' 'கோகிலாம்பாள் கடிதங்களே' யாகும்.

தமிழினம், வேண்டாத சாதியுணர்வுக்குள் மடமைமிக்க காலத்தில் அகப்பட்டுக்கொண்டது. அச்சாதியுணர்வால் பல குற்றங் களையும் கொடுமைகளையும் தமிழினம் செய்து தடுமாறியது. அதற் குரிய தண்டனைகளைப்பெற்றும் தமிழினத்திற்கு அறிவு வரவில்லை.

வெளிப்படையாகச் சாதியுணர்வு செயற்படவில்லையெனினும் உள்முகமாகச் சாதிவெறி இன்னம் தலைவிரித்தாடுகிறது. இதனைப் போராடியழிக்கவே கதைக்கலையைப் போர்க்கருவியாக மறைமலை யடிகளார் கையாண்டுள்ளார்.

இத்தகு அறிவுறுத்தும் புதின இலக்கியங்கள் மிகப்பல தோன்ற வேண்டும். அஞ்சாமைமிக்க மறவர்களான எழுத்தாளர்களே இந்த இலக்கிய அறப்பணியைச் செய்தல் இயலும்.

தமிழினமே, அறிவூட்டும் இலக்கியங்களை விரும்பிப்படிக்க, வரவேற்க முற்படுக! 'நோய் எழுத்துகளை' ஒழிக்க எழுக!

செய்திகள்

அறிவியல் பண்ணையின் சொற்பொழிவு தொடக்கவிழா

தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நிறுவப்பெற்றுள்ள அறிவியல் பண்ணை மக்களுக்குப் பயன்படும் வகையில் சில அறிவியல் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அவ்வகையில் 4—3—84இல் தஞ்சை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பேராசிரியர் ஆ. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், துணைவேந்தர் டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் தொடக்கவுரையாற்ற, டாக்டர் ஞா. இராசராசேசுவரி அவர்கள், 'வாழையடி வாழை' (Genities) என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

'சர்தார்' வேதரத்னம் அவர்களின் 87ஆவது பிறந்தநாள் விழா

திருமறைக்காடு குருகுலம், கல்வி நிலைய நிறுவனரும், நாட்டு விடுதலைப் போரில் பெரும்பங்கு கொண்டவரும், பேராயக் கட்சியில் பேரீடுபாடு கொண்டவரும், காந்தீயப் பற்றுளருமான திரு. 'சர்தார்' அ. வேதரத்னம் அவர்களின் 87ஆவது பிறந்தநாள் விழா 25—2—84இல் திருமறைக்காடு வடக்கு வீதியிலுள்ள அருட்டிரு தாயுமானவர் கல்வி நிலையத்தில், முனைவர் கு. நம்பி ஆரூரன் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆர். கோவிந்தசாமி, பி, ஏ. அவர்கள் தொகுத்த "Random Harvest" என்னும் குருகுலம் வெளியீட்டினை முனைவர் அவர்கள் வெளியிட்டார்கள். திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்கட்கு திரு. ஜெ. சக்கரவர்த்தி பரிசுகளை வழங்கினர். அன்று பிற்பகலில் உயர்திரு வேதரத்னம் அவர்களின் திருவுருவப் பட ஊர்வலமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இலக்கிய மன்றத் தொடக்க விழா

குடியாத்தம் வட்டம் சிங்கல்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 3—2—84இல் இலக்கிய மன்றத் தொடக்க விழாவும், திரு. நீல கணேசன் அவர்கள் எழுதிய 'முத்துக் கதைகள்' நூல் வெளியீட்டு விழாவும், தலைமையாசிரியர் திரு. வி. தேவராசன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஏர்த்தாங்கல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. வி. நாராயணசாமி அவர்கள் 'முத்துக் கதைகள்' என்ற நூலினை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினர். புலவர் திரு. எஸ். செகதீசுவரன், பி. லிட்., பி. எட். அவர்கள் ரூ 101 கொடுத்து நூலினைப் பெற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்றினர். திரு. வி. பி. சுப்பிரமணி, எம்: ஏ., பி. எட். அவர்கள் இலக்கிய மன்றத்தைத் தொடங்கி வைத்துச்

சிறப்புரையாற்றி, திரு. நீல கணேசன் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தினர். அறிஞர் பலரின் பாராட்டுரைக்குப்பின் திரு. நீல கணேசன் ஏற்புரை ஆற்றினர். திருமதி ஏ. சந்திராம்பாள் நன்றி நவின்றார்.

கட்டுரையாளர்கள் கவனிக்க

பலமுறை கூறியும் கட்டுரை எழுதும் அன்பர்கள் மிக நீண்ட தொடர் கட்டுரைகளை எழுதியனுப்புவதோடு அதனை வெளியிடுமாறும் அன்புத் தொல்லை தருகின்றனர். தாள் விலை ஏற்றத்தால் இடர்ப்படும் 'செல்வி'யில் அதிக பக்கங்கள் வெளியிட இயலாத நிலையில், இத்தகைய கட்டுரைகளை வெளியிடுவதால் வேறு பலர்க்கு வாய்ப்பளிக்க இயலாமற் போகிறது. எனவே, அன்பர்கள் இனியாகிலும் சுருக்கமும் விளக்கமும் கூடிய கட்டுரைகளை 4 பக்கங்கட்கு மேற்படாத அளவில் எழுதி அனுப்புவதோடு, அந்தந்த ஆங்கில மாத இறுதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பிவைத்தல் நலம். —ஆசிரியர்

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ருஅ, உசசு ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
கல்லை. த. கண்ணன் (ஆசிரியர் 'வள்ளுவர் வழி')	5	00
அ. பி. மதிவாணன்—வைரம் திருமண நன்கொடை (23—1—84)	5	00

மதிப்புரை

தமிழக அற்புத ஆலயங்கள்

[ஆசிரியர்: வெ. நாராயணசுவாமி, நர்மதா பதிப்பகம், 10 சோம சுந்தரம் தெரு, தி. நகர், சென்னை-600017, பக்கங்கள்: 244, விலை: உரு. 20-00.]

தமிழகத்திலுள்ள ஆலயங்களைப்பற்றியும், அவற்றில் காணப்படும் சிற்ப ஓவியங்கள்பற்றியும் ஆய்வு நூல்கள் பல வெளிவந்து கொண்டிருக்கும் இந்நாளில், திரு. வெ. நாராயணசுவாமி அவர்கள் எழுதிய 'தமிழக அற்புத ஆலயங்கள்' என்னும் நூல் ஓர் அற்புதப்

படைப்பாகும். இதில் வியக்கத்தக்க 33 கோயில்கள்பற்றி ஆராய்ந்து அரிய செய்திகளைக் கூறுகிறுர் ஆசிரியர். பல்லவர் காலச் சிற்பங்கள், சங்ககாலச் சிறப்புகளை விளக்கும் சிற்பங்கள் என்று பல சிற்பங்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு கோயிலிலும் ஏதேனுமோர் அற்புத சிற்பத்தைக் காணலாம். இந்தச் சிற்பங்களின் பின்னணியில் தமிழகத்தின் நாகரிகம் பண்பாடு முதலியன புதைந்து கிடத்தலை விளக்கிக் காட்டுகிருர். இச் செய்திகளைத் தொகுத்தளிக்க ஆசிரியர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை. பதிப்பு முறையும் போற்றத்தக்கது.

அறிமுகம்

[ஆசிரியர்: கவிஞர் வேலூர் ம. நாராயணன், எம். ஏ., நிறை வாணன் பதிப்பகம், 57 சர்க்கார் மண்டி வீதி, வேலூர்-4 (வ. ஆ) விலை: உரு. 9-00.]

இவ்வாசிரியர் பல்வேறு காலங்களில், பல்வேறு இதழ்களில் எழுதிய பயனுள்ள கட்டுரைகள் பதின்மூன்றன் தொகுப்பே இந்நூல். இதில் வள்ளுவர் காலம் முதல் வைக்கம் வீரர் காலம் வரை அறிஞர் பலர் வெளியிட்ட கருத்துகளையும், தாம் பெற்ற சில பட்டறிவுச் செய்திகளையும், தொகுத்துக் கொடுத்துள்ளார். கட்டுரைகள் அனைத்தும் வள்ளுவர், பெரியார், அண்ணு ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கையின் எதிரொலிகளாகவே அமைந்துள்ளன. இக் கட்டுரைகள் பள்ளி மாணவர்கள் படித்துப் பயன்பெறத் தக்கவை. ஆனுல் அதற்கேற்பப் பதிப்பு முறை அமையவில்லை. நூல் இன்னும் சற்றுப் பெரிய எழுத்தால் அமைந்திருப்பின் பலரும் விரும்பிப் படிக்க வும், ஏதுவாகும். எனினும் தமிழ் அன்பர்கள் படித்துச் சுவையும் பயனும் பெறவேண்டிய கருத்துகள் இதன்பால் உள என 'அறிமுக'ப் படுத்துகிருேம்.

கந்தர் கலித்துறை

[ஆசிரியர்: புலவர் வை. தங்கமணி, எம். ஏ., பி. லிட். கிடைக்கு மிடம்: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; லிட். 79, பிரகாசம் சாலை, (பிராட்வே) சென்னை-108, விலை: உரு. 2-00.]

கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம் என முருகன் புகழ் நூல் பல முன்னரே முருக பக்தர்களின் கைகளிலே தவழ்ந்துகொண்டிருக்கும் இந்நாளில் மேலும் பக்தர் கட்கு நல்விருந்தாகக் காலத்திற்கேற்ப, புதிய கருத்துகளை அமைத்துப் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் இனிக்கும் வகையில் 'கந்தர் கலித்துறை' என்னும் நூலினை வழங்கியிருக்கும் ஆசிரியரின் முயற்சியை வரவேற்கிருேம்; பாராட்டுகிருேம்; பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் அந்தாதியாக அமைந்திருப்பது படிப்பதற்கு எளிதாக வும் சுவை பயப்பனவாகவும் இருக்கின்றன.

ஜாதகம் கணிக்கும் வழிமுறைகள்

[ஆசிரியர்: குருதேவ் கோபால கிருஷ்ணு, வசந்தவல்லி பப்ளிஷிங் ஏஜென்சி, 16, காளிங்கராயன் 1வது சந்து, சிமெட்டரி ரோடு, சென்னை-600021, பக்கங்கள் 146, விலை: உரு. 7-00.]

ஜாதகம் என்றால் என்ன; அதனைக் கணித்தல் எப்படி, கணிப்பில் கவனிக்க வேண்டிய குறிப்புகள் யாவை, ஜாதக பலன்களை ஆராய்வது எப்படி, இலக்கினங்கள், இராசிகள் பலன் அறிதல் எப்படி என்பன போன்ற செய்திகளும், பிறந்த ஆண்டு, மாத, கிழமை, நாள்களின் பலன்கள்பற்றிய குறிப்புகளும் அடங்கிய நூல். ஜாதகம் கற்க-கணிக்க விரும்புவோர்க்குப் பயன்படத்தக்க நூல்.

'செந்தமிழ்ச் செல்வி' பற்றிய உரிமை விளக்கம்-1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

1. வெளியிடும் இடம்: 261, இலிங்கிசெட்டித் தெரு, சென்னை 1

2. வெளியீட்டு முறை: திங்களிதழ்

3. அச்சிடுவோர் பெயர்: அப்பர் அச்சகம்
இனம்: இந்தியர்
முகவரி: 80, பிரகாசம்சாலை, சென்னை-108

4. வெளியீட்டாளர் பெயர்: தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
இனம்: இந்தியர்
முகவரி: 80, பிரகாசம்சாலை, சென்னை-108

5. ஆசிரியர் பெயர்: திரு. இரா. முத்துக்குமாரசாமி
இனம்: இந்தியர்
முகவரி: 80, பிரகாசம்சாலை, சென்னை-108

6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குகளுடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும்: தென்னிந்திய தமிழ்ச் சங்கம் (பதிவு)

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் என்னுடைய முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என இரா. முத்துக்குமாரசாமியாகிய யான் உறுதியளிக்கிறேன்.

10—3—1984 (ஒப்பம்) இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,
பதிப்பாளர்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

பதிவு எண் : 4899 March 1984

அப்பர் அச்சகம் சென்னை-108.